

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 30ம் நாள் நிறைமதி (15-12-2024 ஞாயிற்றுக்கிழமை) வெளியீடு +94 21 222 9722



பொன்னகவை காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - தமிழர்களின் அடையாளச் சின்னம்

# பொன்னகவை காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# (பழைய பரமேஸ்வராக் கல்லூரி)














# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org





**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org


# ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 10ம் நாள் (டிச 25)

தேர் ஓடும் வீதியில் தேவர் குலத்தார் நாற்றிசையும் நிறைய, நிலவுலகெங்கும் நிறைந்த சிவபெருமானுடைய பழமையான புகழைப்பாடியும், ஆடியும் திரிகின்ற அருமைத் திங்களே மார் கழித் திங்கள் ஆகும். மார்கழித் திங்களானது விழாக்கள், நோன்புகள், வழிபாடுகள் என்று பத்தி நிறைந்தாகும். மார் கழியானது திருவெம்பாவை, திருவாதிரை, ஆதிரையான் அருட்காட்சி, திருவாதிரைக்களி, திருப்பாவை, மார்கழிப் பெருவிழா என பல சிறப்புகளை கொண்டது.

சைவத்தமிழ் மக்கள் பலவாறு மார்கழியை கொண்டாடு கின்றனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழி விழாக்கள் நடைபெறுகின்ற போதும், ஈழத்திருநாட்டில் கடந்த 2021ம் ஆண்டில் இருந்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் சைவ மாணவர் சபை, மார்கழிப் பெருவிழா எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமை களை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக கொண்டாடிவருகிறது. இம்முறை நான்காவது முறையாக நடை பெறவிருக்கும் இவ்விழாவில் பிறமாவட்டங்களில் இருந்தும் பலர் பங்குபற்ற உள்ளனர். குறிப்பாக அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் இந்தவிழாவில் பெரிதும் கலந்துகொள்வார்கள்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், ஊதியம் இன்றி அல்லது மிகவும் குறைந்த ஊதியத்துடன் உழைக்கும் அறநெறி ஆசிரியர்கள், மாண வச் செல்வங்களுக்கு அறத்தினை, பண்பாட்டினை, வழிபாட் டினை, திருமுறைகளை, சாத்திரங்களை மற்றும் வாழ்வியலை எடுத்துரைக்கும் உன்னத சேவையை ஆற்றிவருகின்றனர். இவர்களை பாராட்டுவது நாம் அனைவரினதும் கடமையா கும். அந்தவகையில் **“மார்கழிப் பெருவிழாவை’ முன் னிட்டு அதியுயர் விருதான “மெய்கண்டார் விருது”**, தெரிவு செய்யப்பட்ட அறநெறி ஆசிரியர்களுக்கு வழங்கப் படவிருக்கிறது.

அதேபோல் இம்முறையும் மார்கழிப் பெருவிழாவை மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) புதன்கிழமை, யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தில் அரங்கில் நடாத்தத் திரு வருள் கூட்டியுள்ளது. இந்த விழா சிறப்பாக நடைபெறவேண்டும் என்று பலர் தாமாக முன்வந்து விழாவிற்கான பல உதவி களை ஆற்றி வருகின்றனர். குறிப்பாக பலர் நிதியுதவியும் செய்துத்துள்ளனர். அவர்களுக்கு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

சைவத் தமிழ் அமைப்புகள், இப்படியனான சைவத்தமிழ் விழாக்களை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக நாம், நாயன்மார் குருபூசைகள், சேக்கிழார் விழா, ஆதிரைநாள் விழா, விளக்கீடு, தைப்பூசம், தமிழ் வருடப்பிறப்பு, தீப ஆவளி போன்ற நிகழ்வுகளை நடத்தவேண்டும் என்று விண்ணப்பம் வைக்கிறேன். இப்படியான விழாக்கள் மூலம் எமது பண்பாடு நிலைநிறுத்தப்படுவதுடன், இளையோருக்கு கடத்தப்படுகிறது.

இம்முறையும் முன்னர் போல் தமிழகத்தில் இருந்து அறிஞர்கள், அருளாளர்கள், இசை வல்லுநர்கள் வருகை தரவுள்ளனர். அத்துடன் இலங்கையில் இருக்கும் உள்ளக கலைஞர்கள், பேச்சாளர்கள், இசை வல்லுனர்களும் சேர்ந்து சிறப்பிக்க இருக்கின்றனர். அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆதிரையானின் அருளை பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**ஊர் திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்
கார் தரு சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்**

திருச்சிற்றம்பலம்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(15-11-2024) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 29ம் நாள் நிறைமதி அன்று (15-11-2024 வெள்ளிக்கிழமை) ஐம்பத்து ஒன்றாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய வடமாகாண ஆளுநர் சிவத் திரு. நாகலிங்கம் வேதநாயகம் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்தின் முதல்வர் தவத்திரு. வெங்கடேச ஐயர் இரகுநாதையர் ஐயா அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் தென்னாடு திங்கள் இதழின் ஐம்பத்து ஒன்றாவது வெளியீட்டில் வடமாகாண ஆளுநர் அவர்கள் தென்னாடு இதழின் சிறப்பையும், இவ்விதழ் அச்சு இதழாக தொடர்ந்து வெளிவரு வதையும் எடுத்தியம்பி போற்றியிருந்தார். மேலும் அவர், தான் மாவட்ட அரசாங்க அதிபர் பதவியிலிருந்து இடைவிலகி இருந்த நிலையிலும் தற்போது வடமாகணத்தின் புதிய ஆளுநராக பதவி ஏற்றிருப்பது இறைவன் திருவருளால் இடம்பெற்றிருக் கின்றது என்ற விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார். மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் கடந்த பங்குனி நிறைமதி (24-03-2024) இதழ் வெளியீட்டில், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபராக பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இந் நிகழ்வில் துணைவேந்தர் ஐயா அவர்கள் ஆளுநர் அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து ஒன்றாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார்.

தொடர்ந்து அன்றைய நாளில் சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்தின் முதல்வர் தவத் திரு. வெங்கடேச ஐயர் இரகுநாதையர் ஐயா அவர்களை கௌர விக்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

(27-11-2024) – அமாரர் சிவத்திரு. சின்னத்துரை முத்துக் குமார சுவாமி அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (02-12-2024) – அமாரர் சிவத்திரு. இரத்தின காந்தி முத்துக்குமார சுவாமி அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (28-11-2024) – கார்த்திகைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(05-12-2024) – பேராசிரியர் சிவத்திரு. மீ. சிவசண்முகம் ஐயா அவர்கள், கலாநிதி சு. உமாமகேஷ்வரி அம்மையார் அவர்கள் உட்பட எழுபத்து ஐந்து அடியார் பெருமக்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்து, தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் வழி பாடு ஆற்றியிருந்தனர். (09-12-2024) – தென்னாடு சைவ மாணவர் சபையின் ஏற்பாட்டில், சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களின் நிதிப் பங்களிப்பில், 2023ம் ஆண்டு யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலின் முதலாம் ஆண்டு நிறைவையிட்டு சங்குநீராட்டு பெருவிழா சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இவ்வழிபாட்டை செந்தமிழ் அர்ச்சகர் தவத்திரு. உயிரொளி சிவம் பிரதாபனார் ஐயா அவர்கள் சிறப்பாக ஆற்றி வைத்தார். இந்நிகழ்வில் கொடையாளர் சுபதாசன் அவர்களின் உறவினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தென்னாடு சைவ மாணவர் சபையினர் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(10-12-2024) – 2024ம் ஆண்டு மார்கழிப் பெருவிழா முன்னிட்டு தென்னாடு சைவ மாணவர் சபையின் விசேட நிர்வாகக் குழுக் கூட்டம் மாலை 4.30 மணியளவில் தென்னாடு சிவமடத் தில் இடம்பெற்றது. (13-12-2024) – கார்த்திகைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (14-12-2024) – கார்த்திகைத் திங்கள் தீபத் திருநாள் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. ஐம்பூதநாதர் திருக்கோயில் சிறப்பாக தீபங்களினால் அலங்கரிக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. அன்றைய நாளில் அடியார்கள் பலரும் வழிபாட்டில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

# 34 ஆண்டுகளின் பின் பலாலியில் திறக்கப்பட்ட திருக்கோயிலில் இடம்பெற்ற வழிபாடு



யாழ்ப்பாணம் வலி வடக்கு பலாலியில் மக்கள் வழி பாட்டுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட அருள்மிகு இராசஇராசேசுவரி அம்மன் திருக்கோயிலில் கடந்த 04-12-2024 அன்று இடம்பெற்ற வழிபாடுகளில் வடக்கு மாகாண ஆளுநர் சிவத்திரு. நா. வேதநாயகன் ஐயா அவர்கள் கலந்துகொண்டார்.

ஆளுநர் அவர்களுடன், யாழ். மாவட்ட கட்டளைத்தள பதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதன்போது கோயில் நிர்வாகத்தினராலும், திருக்கோயில் அர்ச்சகராலும் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் சிவத்திரு. க.சிறிமோகனன், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பலாலி வடக்கு அருள்மிகு இராசஇராசேசுவரி அம்மன் திருக்கோயிலில் 34 வருடங்களின் பின் மக்கள் வழிபாடு செய்ய அனுமதி வழங்கி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'பரமேஸ்வரம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமையப் பெற்றுள்ள அருள்மிகு பார்வதி அம்மை உட னுறை பரமேசுவரர் திருக்கோயில் திருக் குட நன்னீராட்டு பெருவிழா சிறப்பு மலராக 'பரமேஸ்வரம்' நூல் வெளி யிட்டு வைக்கப்பட்டுள்ளது. இந் நூல் வெளியீட்டு நிகழ்வு பரமேஸ் வராக் கல்லூரி இயக்குநர் சபை தலை வர் வாழ்நாட் பேராசிரியர் சிவத்திரு. சி. க. சிற்றம்பலம் ஐயா அவர்கள் தலை மையில், கடந்த 06-12-2024 வெள்ளிக் கிழமை மாலை 2 மணியளவில், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றிருந்தது. வெளி யீட்டு விழாவில் முதல் பிரதியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரிடமிருந்து, வாழ்நாட் பேராசிரியர் சிவத்திரு. அ. சண்முக தாஸ் ஐயா மற்றும் அவரது துணைவி யார் முனைவர் மனோன்மணி சண்முக தாஸ் தம்பதியினர் பெற்றுக்கொண்டனர்.



மேலும் இந்நிகழ்வில் அருள்மிகு பார்வதி அம்மை உடனுறை பரமேசுவரர் திருக்கோயில் பிரதமகுரு அவர்கள், இரசாயனவியல் துறை பேராசிரியர் சிவத்திரு. பூ. ஐங்கரன் அவர்கள், இந்துக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி சிவத் திரு. ச. பத்மநாபன் ஐயா அவர்கள், தெல்லிப்பளை அருள்மிகு துர்க்கை அம்மன் திருக்கோயில் தலைவர் கலா நிதி சிவத்திரு. ஆறு திருமுருகன் ஐயா அவர்கள், வலம்புரி பத்திரிகை தலைமை ஆசிரியர் சிவத்திரு. ந. விஜயசுந்தரம் ஐயா அவர்கள், தமிழ்த்துறையை சேர்ந்த சிவத்திரு. ஈ. குமரன் அவர்கள், கணக் கீட்டுத் துறையை சேர்ந்த சிவத்திரு. ச. பாலபுத்திரன் அவர்கள் மற்றும் சேர். பொன். இராமநாதன் கட்புல மற்றும் அவைக்காற்றுகை கலைகள் பீடத்தை சார்ந்தோர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

# திருவாவடுதுறை ஆதீன 23ஆம் குருமகாசந்நிதானம் சுவாமிகளின் குருபூசை விழா



இலங்கை சைவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் திருவாவடுதுறை ஆதீன 23ஆம் குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகப் பெருமானார் குருபூசை விழா கடந்த 08 - 12 - 2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கார்த்திகை சதயம் விண்மீனும் கூடிய நன்னாளில், இலங்கை சைவநெறிக் கழகத்தின் சொய்சாப்புரம் மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலையில் காலை 9 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இவ்விழாவில் சொய்சாப்புரம் மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களே முன்னின்று சிவ பூசையையும் குருபூசையையும் மிகச்சிறப்பாக நடத்தியிருந்தனர். கொடிக்கவி பாடி விடைக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் நாவலர்பெருமானின் நித்திய கரும விதிப்படியான சைவ அநுட்டானத்தைச் செய்து, சிவ பூசையையும் குருபூசையையும் நிகழ்த்தினர். தொடர்ந்து இலங்கை சைவநெறிக் கழகத் தலைவர் வைத்தியக் கலாநிதி சிவத்திரு. ஈசானதேசிகர் கி. பிரதாபன் அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றிருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# மிருசுவிலில் திருமுறைச் சிவவேள்விப் பெருவிழா





மிருசுவில் ஒட்டுவெளி வீரபத்திரர் திருக்கோயிலில் மக்களின் நன்மை கருதி, பன்னிரண்டு நாட்கள் இரவு பகலாக இடைவிடாது திருமுறை ஓதி சிவவேள்விப் பெருவிழா நடத்தப்பட்டிருந்தது. இத்திருமுறைச் சிவவேள்விப் பெருவிழாவில் கந்தபுராணம் திருப்புகழ் முற்றோதலும், சிவமூலமந்திரம் உச்சரித்தலும் இரவு பகலாக தொடர்ந்து நடைபெற்றிருந்தது.

கடந்த கார்த்திகை திங்கள் 16ம் நாள் (01-12-2024) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் விசேட பூசை நடைபெற்று, 5.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த திருமுறை சிவவேள்விப் பெருவிழா தொடர்ந்து இரவு பகலாக 12 நாட்கள் இடைவிடாது ஓதப்பட்டு, கடந்த கார்த்திகை திங்கள் 28ம் நாள் வெள்ளிக்கிழமை 13-12-2024 பூரணை திதியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய நன்னாளில், கூட்டுபிராத்தனையும், திருமுறை 1008 போற்றி அருட்சுணையும் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு விரபத்திர பெருமானின் திருவருள் நிறைவடைந்திருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# பன்னோக்கில் திருமுறைப் பண்கள்




**பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழவையும்**
**உள்நின்றதொர் சுவையும் உறு தாளத்தொலி பலவும்**
**மண்ணும் புனலும் உயிரும் வரு காற்றும் சுடர் மூன்றும்**
**விண்ணும் முழுதானானிடம் வீழிம்மிழலையே.**

**- திருஞானசம்பந்தர்.**

திருநெறிய தமிழ் என்று போற்றப்பெறும் சிறப்புடையன தேவாரப் பண்ணிசைப் பாடல்கள். பக்தி, அன்பு, தமிழ், இசை, வரலாறு, பண்பாடு மட்டுமல்லாமல் அறிவியல், சமூக வியல், மானுடவியல், அறவியல், நாட்டுப்புறவியல் எனும் விழுமியங்களையும் பதிவுசெய்துள்ள பெட்டகங்களாக வும் இவை விளங்குகின்றன. தேவாரப் பாடல்கள் திருக் கோயில்களில் பாடப்பெறும் பக்திப் பாடல்கள் என்று எண்ணுவோர் பலர். அதனால் அவற்றில் பொதிந்துள்ள பிற நுணுக்கங்களைப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். பண்ணிசை வழியாகவே தேவாரம் பாடியோர் எல்லாச் செய்திகளையும் மக்களிடையே பரப்பினர். இசை மனிதனை இசைவிப்பது. பண் மனிதனைப் பண்படுத்துவது. பயிர் விளையும் வயலைப் பண்படுத்தினால்தான் நல்ல விளைச்சலைப் பெறமுடியும். அது போல மனிதனுடைய மனத்தைப் பண்படுத்தினால் தான் நல்ல எண்ணங்களை விளைவிக்க முடியும். எனவே



**பேரா.முனைவர்**
**கோ.ப. நல்லசிவம்**
**தலைவர், மெய்யியல் துறை,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர்**

மனதைப் பண்படுத்தும் சக்தி படைத்த தமிழிசை வடிவத்தைப் பண் என்ற சொல்லாலேயே நம்முன்னோர் குறித் தனர். இப்பழந்தமிழ்ப் பண்ணிசைப் பதிக மரபை மீட்டுருவாக்கம் செய்து பதியமிட்டவர் காரைக்காலம்மை யார் ஆவாரர் அவர் தொடங்கிவைத்த பண்ணிசைப் பதிக மரபை அடியொற் றியே தேவார மூவர் பக்தியியக்கம் கண் டனர். சைவத்தையும் தமிழையும் வளர்க்க அவர்கள் கண்ட ஊடகம் பண்ணிசை யாகும்.

## மனதைப் பண்படுத்தும் பண்ணிசை

மனதைப் பண்படுத்த நம்முடைய முன்னோர்கள் கண்ட அருமருந்து இசையாகும். இசையால் மனிதர்களை மட்டுமல்ல விலங்குகள், பறவைகள், ஓரறிவுடைய தாவ ரங்களைக் கூட வசப்படுத்த முடியும். மனதை ஒருநிலைப் படுத்த இசை மிகச்சிறந்த வழிமுறை. எனவேதான் தமிழர் தம் இசை மரபைப் பண் என்று குறித்தனர். காரணம் இது மனதைப் பண்படுத்துகிறது. அவ்வகையில் சங்க காலத்தது



இசை மரபை பண் மரபை மீட்டுருவாக்கம் செய்த பெருமை காரைக்காலம்மையாரையே சாரும். அவர்களில் தொடங்கிய பதிகப் பண்ணிசை மரபு பிற்காலத்தில் தேவார மூவரால் வளத்தெடுக்கப்பட்டது. அவ்வகையில் பண்ணிசைபாடிய திருஞானசம்பந்தர் பாடல்கள் திருக்கடைக்காப்பு எனவும், திருநாவுக்கரசர் பாடல்கள் தேவாரம் எனவும், நம்பியாரூரர் பாடல்கள் திருப்பாட்டு எனவும் தனித்தனியே அழைக்கப் பட்டாலும் பின்னர் பதிகத்தின் அமைப்பு கருதி மூவர் பாடிய தமிழையும் மூவர் தேவாரம் எனப் பொதுப்படையாக அழைக்கும் வழக்கம் நிலைத்துவிட்டது. இவ்வடிப்படையில் திருஞானசம்பந்தர் சைவ சமயக்கொள்கைகளைப் பரப்பும் சாதனமாக மட்டும் பண்ணிசையைக் கொள்ளாமல் ஒருநெறிய மனம் வைத்து இறைவனை வழிபாடு செய்து வீடுபேறடையச் செய்யும் ஊடகமாகவும் பயன்படுத்தி

னார் என்பது அவரது தேவாரப்பாடல்கள் அனைத்தும் பண் சுமந்த பாடல்களாகவே இருப்பதை நோக்கும் போது உணரலாம்.

மூவர் பாடிய தேவாரப் பாடல்களை இரண்டு வகையாகப் பதிப்பித்துள்ளனர். அவை பண்முறை , தலமுறை என்பனவாகும். தேவாரப் பாடல்கள் அனைத்தும் இறைவன் முன்னிலையில் நேரிடையாக இசைக்கப்பட்டவை. இசைக்கப்பட்ட அப்பாடல்களுக்கு அவற்றின் இசைத்தன்மைக்கேற்பப் பண்களை அமைத்தனர். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 22 பண்களும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் 10 பண்களும், நம்பியாரூரர் தேவாரத்தில் 17 பண்களும் கிடைத்துள்ளன. திருநாவுக்கரசர் பாடிய ஐந்து மற்றும் ஆறாம் திருமுறைகளுக்குப் பண் வகுக்கப்படவில்லை. பண்ணிசை என்பதற்கு ச. தண்டபாணி தேசிகர் “ இசை தாமே விளங்கும் வேதம்’ என்று விளக்கமளித்துள்ளார். எனவே அனைவரையும் தம்பால் ஈர்த்து இசைய வைக்கும் சக்தி இசைக்கு இருந்தபடியால் மூவர் தமிழ் இசைவடிவாக எழுந்ததெனலாம். தேவார மூவர் பாடிய பண்களாக நமக்கு இன்று கிடைத்தவை 23 ஆகும். யாழ்மூரி எனும் காரணப்பெயரால் தோன்றிய பண்ணையும் சேர்த்தால் 24 எனக் கொள்ளலாம். இப்பண்களில் சில, தேவாரத்திலேயே பெயர் சுட்டிப் பாடப்பெற்றுள்ளன. சான்றுகளாக,

**காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாட- 1:30:6**
**கொல்லியாம் பண்ணுகந்தார் குறுக்கை வீரட்டனாரே.- 4:49:6**
**காரடைந்த சோலை சூழ்ந்த காமரம் வண்டிசைப்ப - 1:47:3**
**பாடுகின்ற பண் தாரமே. - 3:374:3**
**குருந்தம் ஏறிச் செவ்வழி பாடும் குற்றாலம் - 1:99:10**
**பஞ்சுரம் பாடி வண்டியாழ் முரலும் பரிதி நியமம் - 3:272:3**

எனவருவனவற்றைச் சுட்டலாம். இவைதவிர காஞ்சிப் பண், மருட்பண், செந்துறைப்பண், பாலைப்பண், மருதப்பண் முதலியன குறித்த குறிப்புகளும் இடம்பெறுகின்றன. இசை வடிவத்திலேயே சமயக் கருத்துகளையும், இறைவன் பெருமைகளையும், மனித நேயம், தொண்டு நெறி, சித்தாந்த நெறிகள், சமயப் பணிகள், சமயத்தின் தேவை, ஆன்ம நேய ஒருமைப்பாடு, தியாகம், அன்பு வழிப்பட்ட உறவு, சமுதாயத்தின் தேவைகள், உலகத்தின் மீதான கருத்துகள் ஆகியன அனைத்தும் மக்களிடையே வலியுறுத்தப்பெற்றன. மனிதனைப் பண்படுத்திப் புனிதனாக்கும் சக்தி இசைக்கு உண்டு என்பதால் தான் இசைக்குத் தமிழில் பண் எனக் குறித்திருந்தனர் போலும். திருமுறையாசிரியர்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும் சமயநெறியைக் காட்டினர். பாடுவார் பசி தீர்ப்பார், பரவுவார் பிணிகளைவார், பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே, திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே, ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நம் மேலை வினைகளே, ஏழிசை இன்தமிழால் இசைந்தேத்திய பத்திவையும் என்றெல்லாம் குறிப்பிட்டு பாடல் பாடுவதன் இன்றியமையாமையை விதந்தோதினர்.

மெய்யியல் எனப்படும் மெய்ஞ்ஞானத்தால் தேவாரமூவர் எல்லாவற்றையும் கண்டனர். அறிவு அறிவது, ஞானம் உணர்வது. எனவே அறிவால் அறியப்படும் அறிவியல் உண்மைகள் ஞானிகளால் ஞானத்தால் உணரப்படுகிறது. ஆனால் அறிவியல் ஒரு கட்டத்தில் நின்று விடுகிறது. மெய்ஞ்ஞானம் எனப்படும் மெய்யறிவு அதனையும் தாண்டிப் பயணிக்கிறது. கி.பி. 18, 19 நூற்றாண்டில் கண்டறியப்பெற்ற ஸ்கேனர் எனும் கருவி மருத்துவத்துறையில் மிகப்பெரும் வரவாகக் கருதப் பெற்றது. தாயின் வயிற்றில் இருக்கும் கரு எவ்வாறு உருவாகிறது, வளர்கிறது என்பதைத் துல்லியமாக அது படம்பிடித்துக் காட்டியது. கருவில் முதலில் உருவாவது எது என்பதை அக்கருவி கண்டறிந்தது. ஆனால் 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் பக்திப் பாடலில் சர்வ சாதாரணமாக மெய்ஞ்ஞானத்தால் கண்டறிந்து குறிப்பிட்டுள்ளமை வியப்பைத் தருகிறது. அப்பாடல்,

**கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை கருநரம்பும் வெள்ளெலும்பும் தேர்ந்தொன்றாகி**
**உருவாகிப் புறப்பட்டு இங்கு ஒருத்தி தன்னால் வளர்க்கப்பட்டு உயிராரும் கடைபோகாரால்**
**மருவாகி நின்னடியே மறவேனம்மான் மறித்தொருகால் பிறப்புண்டேல் மறவா வண்ணம்**
**திருவாரூர் மணவாளா திருத்தெங்கூராய் செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே. (6:ஆரூர்:6).**

என்பதாகும். இதைப்போன்று பல பாடல்களில் இசை வழியாக மருத்துவ அறிவியல் செய்திகளை அள்ளித்தரும் தேவாரத்தில் பண் இசையே மருத்துவமாக உடல் நலத்தைப் பேண வல்லது என்பதை நிருபிக்கும் வண்ணமாகவும் பாடல்கள் காணப்படுவது ஈண்டு சிந்திக்கத்தக்கதாம். இன்று உலகில் பல்வேறு நாடுகளில் இசை மருத்துவம் என்பதை மிகத்தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். இந்த நூற்றாண்டில் இசை மீது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆர்வம் வியப்பிற்குரியதன்று. காரணம் நம் முன்னோர் நம் தமிழ்நாட்டில் சங்க காலந் தொட்டே இசை மூலமாக எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று நிரூபித்துள்ளனர். பெருங்கதையில் உதயணன் மதங்கொண்ட யானையை யாழிசையை மீட்டி சமநிலைக்குக் கொண்டு வந்து அமைதிப்படுத்தினான் என்ற வரலாறு இதனை மெய்ப்பிக்கும்.

திருமுறைப்பண்கள் தமிழ் இசையை மட்டுமல்ல நம்முடைய உடல் நலத்தையும் பாதுகாத்து நமக்குத் தரவல்லன என்பதைப் பல நூறு சான்றுகளின் வழி நிருபிக்க முடியும். தமிழும் இசையும் அறிந்தவர்களோடு மருத்துவ அறிவியல் சார்ந்தவர்கள் இணைந்து ஆய்வினை மேற்கொண்டால் இன்னும் பல அதிசயத்தக்க முடிவுகளைப் பெற முடியும். அறிவியல் என்றாலே மேலை நாட்டவர் என்ற நிலையில் இருக்கும் நம்முடைய இளைய தலைமுறையினர்க்கும், அடுத்த தலைமுறையினர்க்கும் நம் தமிழ்ப்பண்ணிசையை இசையாகவும், அறிவியலாகவும், பண்பாடாகவும் கற்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் முழுமையான பயனை நாம் பெற முடியும்.

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.மு 3ஆம் ஆண்டு வரலாற்றுடன் தொடர்புடைய மட்டக்களப்பு வேலோடும் மலை சிவன் கோயில்





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

மட்டக்களப்பு பட்டிணத்திலிருந்து 35 கிலோமீற்றர் தொலைவில் வேலோடும் மலை அமைந்துள்ளது. இவ்விடம் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொல்லியல் இடமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. திருமலை வீதியிலுள்ள மாவடிவேம்பிலிருந்து தென்மேற்குப் பக்கமாகச் செல்லும் போது சந்தனமடு ஆறு வரும். அவ்வாற்றைக் கடந்து செல்லும் போது அடர்ந்த காடுகள், மலைகள், சேனைப்பயிர்த் தோட்டங்கள் சூழ்ந்திருக்கும் பகுதிகளில் சுமார் 60 அடி உயராமான இரு பரந்த மலைகள் காணப்படுகின்றது. இவற்றில் ஒரு மலையே வேலோடும் மலை என்று அழைக்கப்படுகின்றது.

இம் மலையை பண்டைய காலத்திலிருந்து வேடர் ஓடிய மலை, வேரோடியமலை, தேரோடிய மலை என்றே வழங்கி வந்துள்ளனர். அப்பெயர்கள் மருவி திரிபடைந்து வேலோடும் மலை ஆகிற்கு என்று இங்கு வாழும் கிராமவாசிகள் கூறுகின்றனர்.

### வேலோடும் மலையில் நாகர்

வரலாற்று நோக்கில் கிழக்கிலங்கையை ஆராய்ந்து கொண்டிருக்கின்ற ஆய்வாளர்கள் இப்பிரதேசத்தில் பல இடங்களில் நாகர் இனம் வாழ்ந்தமைக்கான தொல்லியல் எச்சங்களை கண்டுபிடித்துள்ளனர். அந்த வகையில் வேலோடிய மலையிலும் அதன் எதிரே அமைந்துள்ள மலையிலும் நாகர்களின் இருப்பும், தமிழ் பௌத்தர்களின் இருப்பும் இருந்துள்ளமையை அடையாளப்படுத்தும் தொல்பொருட் சின்னங்கள் ஏராளம் காணப்படுகின்றன.

வேலோடும் மலையில் தற்பொழுது வேல் வழிபாட்டுடன் கூடிய கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அக்கோயில் மலையில் உச்சிப் பகுதியில் அமைந்துள்ளது. அக்கோயிலின் அத்திவாரப் பகுதி முற்றிலும் நாகரின் இராட்சிய இருப்புக்கான எச்சங்களாகவே உள்ளது. அக்கட்டடத்தின் இடிபாடுகள், செங்கற்கள், கலவோடுகள், கருங்கற்தூண்கள் ஆங்காங்கு மலையில் சரிந்து விழுந்த வண்ணமாகத் தென்படுகின்றது. கோயில் உள்ள பகுதியின் சற்றுக் கீழே ஒரு சமதளத்தின் புல்வெளியில் 22 தூண் தாங்கும் கற்கள் இருப்பதனால் இவ்வடம் நாகரின் இராசதானியாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. தற்போது சிவன் கோயில் அமைந்திருக்கும் பகுதியில் ஏராளமான கலவோடுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் சங்குமன்கண்டி, பாலாமடு, படிவெட்டினமலை ஆகிய இடங்களில் கிடைத்துள்ள கலவோடுகளோடு ஒத்திருக்கின்றது.

மற்றும் வேல் உள்ள மலையில் பரிபாரத் தெய்வமாக மூன்று கற்கள் காணப்படுகின்றன. அவை பரிபாரர், நாகராஜன், குலதெய்வம் என்று பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. இவற்றில் நாகராஜன் கல் அம்மலை நாகருக்குரிய இருப்பிடத்தை அடையாளப்படுத்துகின்றது. நாகர் இனத்தவரின் வழிபடு தெய்வமாக நாகவடிவம் விளங்குகின்றது. கிழக்கிலங்கையில் சங்குமன்கண்டி, கஞ்சிகுடிச்சாறு, காரைதீவு, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் நாகர் பெயர் பொறிக்கப் பெற்ற நாகவடிவக் கற்தூண்கள் இதற்குச் சான்றாகும். வேலோடும் மலையில் உள்ள நாகராஜன் வடிவம் சீமெந்து கலவையில் அதன் அடிப்பாகம் மூழ்கியிருக்கின்றது. அதன் அடிப்பாகத்தில் **“மணிநாகன்”** பெயர் பொறிப்பு நிச்சயமாக இடம் பெற்றிருப்பதற்கு வாய்ப்பு அதிகம். அதனை வெளிக் கொணரும் பட்சத்தில் அவ்விடம் நாகரின் இருப்புக்குரிய தக்க ஆவணமாகும். அம்மூன்று கற்களும் நாகர்களின் வழிபாட்டுக்குரியதாகவே விளங்குகின்றது.

### நாகர் மலையில் நாகர்

வேலோடும் மலைக்கு முன்பாக அமைந்துள்ள மலையை நாகர்மலை என்று கூறுவர். இம்மலையின் முகட்டுப் பகுதியில் செம்மஞ்சள் நிறத்தில் மண்மேடும் அதில் செங்கற்கள் கொண்டு வட்டவடிவமாகக் கட்டப்பட்ட தூபியின் வடிவம் தென்படுகின்றது. அது சிறிய பற்றைகளாகவும், புதைகுழிகளாகவும் காணப்படுகின்றது. மலையின் தென்பகுதியில் ஓர் பழமையான கட்டட இடிபாடுகளும், ஆங்காங்கு சிதறுண்டு கிடக்கின்ற கற்தூண்களும், அக்கற்தூண்களின் சிலவற்றில் அலங்கார வேலைப்பாடுகளும் காணப்படுகின்றது. மலையடிவாரத்தில் எண்கோணவடிவுடைய நீர்ச்சுணை ஒன்றின் சிதைந்த பகுதியும், ஆங்காங்கு கட்டில் போன்ற படுக்கைக் கற்களும், அரைப்பதற்குரிய குழிகள் கொண்ட கற்களும்



நாக மலையின் தோற்றம்

காணப்படுகின்றன. தூபியின் வடிவம் அமைந்திருக்கும் பகுதிக்குச் சற்று கீழ் பகுதியில் இயற்கையாக உள்ள புற்றும் நாகர் சிலை ஒன்றும் காணப்படுகின்றது. இம்மலை தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கும் அவர்களும் நாகர் வழிவந்த வர்களாக இருப்பதற்குமுரிய ஆதாரமாகக் கருதிக் கொள்ள முடிகின்றது.

இம்மலையின் தென்மேற்குப் பகுதியின் அடிப்பகுதியில் கி.மு. 1ஆம் நூற்றாண்டிற்கும், கி.மு. 3ஆம் நூற்காண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த மேல்வரியில் 18 எழுத் துக்களும் கீழ் வரியில் 13 எழுத்துக்களும் பொறிக்கப்பெற்ற பாறைக் கல்வெட்டு ஒன்று பதிவாகியுள்ளது. இதனைப் பிற்கால பிராமி எழுத்துக்கள் என இனம் கண்டுள்ளனர். இக்கல்வெட்டு பரணவிதானவினால் 1983 இல் வெளியி டப்பட்ட 'Inscriptions of Ceylon – Late Brahmi Inscriptions – Vol – 02' நூலில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிராமி வடிவமும், தமிழ் வடிவமும் பின்வருமாறு அமைந்துள்ளது.

**"மஹாநாக ரஜஹ டக பஹநாக விஹாரஹி கிரிகஹோதஹி அலி ஸகய தினே"**

இதன்படி "கிரிக்காகோத்த எனும் ஊரில் உள்ள கால்வாய் அல்லது நீரோடையை மகாநாக மன்னனால் தக்கபகன எனும் விகாரைக்காக சங்கத்தாருக்கு வழங்கப்பட்டது" என்ற செய்தி சொல்லப்பட்டது. இதில் மகாநாகன் நாகவழிவந்தவன் என்பது புலனாகின்றது. பரணவிதாவின் கருத்துப்படி இவன் யார் என்று அனுராதபுர அரசர்களிலிருந்து இனம் காண முடியாதுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். ஆய்வாளர் திருச்செல்வம் அவர்கள் குறிப்பிடும் போது அவர் வலிந்து கூறிய குடகண்ண தீஸனின் இளைய மகனே மகாநாகன் என்று கூறுகிறார். இவ்விருவரின் கருத்துக்களும் ஏற்புடைய தல்ல.

பேராசிரியர் பத்மநாதன் இலங்கைத் தமிழர் வர லாற்று நூலில் நாகர்கள் தமிழர்கள் என்றும் மட்டக்களப்பு பிராந்தியத்தில் இவர்களின் ஆட்சி இடம் பெற்றது என்றும் அவர்கள் ஆதி காலம் தொட்டுப் பேசிய மொழி தமிழ் மொழி என்றும் கூறுவதைக் கொண்டும் மகாநாக மன்னனும் நாகர் சமூகத்தைச் சேர்ந்தவன் அவன் நாகவழிபாடு செய்து



நாக மன்னன் பற்றிக் குறிப்பிடும் பிற்கால பிராமிக் கல்வெட்டு

வந்துள்ளான். நாகர் மலையில் பௌத்த தூபியையும் நிறுவி அம்மலையில் இருந்து ஊற்றெடுத்து ஓம் ஒரு நீரோடை யைத் தானமாக வழங்கியுள்ளான் என்பதையும் ஊகித் தறிந்து கொள்ள முடிகின்றது.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### சுந்தரரைத் திருமணக்கோலத்தில் தடுத்தாட்கொள்ளல்

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

*திருவெண்ணெய் நல்லூர் அவையில் கணக்கன் மூல ஒலையை பிரித்து படிக்கலானான்.* **"நாவலூர் ஆதிசைவ னாகிய ஆரூரன் எழுதிக் கொடுத்த தாவது, வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என் சந்ததியாரும், வழி வழித் தொண்டுசெய்ய ஒப்புக்கொண்டு இவ்வோலை எழுதிக் கொடுத்தேன். இதற்குச் சான்று இவை என் எழுத்திலிருப்பது"** *இந்த வாசகம் கேட்ட பின்னர்ச் சான்றாக இவ்வாவணத்தில் மேலெழுத்திட்டவர்களின் நாவலூர் நம்பியை அவையோர் பார்த்து இஃது உங்கள் கையெழுத்துக்களை ஒப்பு நோக்கித் தெளிந்தார்கள். பின் பாட்டனார் எழுத்தா என்று தெளி வாகப் பாருமென்றார்கள். அப்போது மறைக்கிழவர் கூறுவார்,* **"இவன் பாட்டனார் கையெழுத்து இவனுக்கா தெரியும்? இவன் பாட்டனாரது வேறு எழுத்து இருந்தால் அதனை இதனோடு**

**ஒப்புநோக்கி நீங்கள் உண்மை தெளியுங்கள் என்றார்."** அவ்வாறே அவர்கள் ஒப்புநோக்கி இரண்டும் ஒத்திருந்தமை யறிந்தார்கள்.

அப்போது அவையோர், **"இவ்வந்தணர்க்கு நம்பியாரூ ரராகிய நீர் தோற்றீர், ஆதலால், அவர் ஏவியதைச் செய்தல் உம்முடைய கடன்"** என்றனர். நம்பியாரூரரும், **"விதி இது வேயானால் நான் இசையேனென்று சொல்ல முடியுமா?" என்று கூறி நின்றார். அப்போது அவையோர் அந்தணரைப் பார்த்து, "நீர் இந்த ஊரினரென்றீரே அங்ஙனமாயின், இந்த ஊரில் உம்முடைய வீடு வாசல் முதலியவற்றைக் காட்டுங்கள்"** என்றார்கள்.

அப்போது வழக்கு வென்ற புண்ணியர், **"நீங்கள் ஒருவரும் என்னையறிய மாட்டீர்களென்றால் வாருங்கள்"** என்று சொல்லி மறையோர் கூட்டமும் நம்பியும் தம்மைத் தொடரத் திரு வருட்டுறை என்னுங் கோயிலுட் புகுந்தார். பிறர் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள். அப்போது நம்பியாரூரர் இவர் திருக்கோயில் புகுந்தது எதனாலோவென்று பெரு விருப்போடு அவரைத் தனியே பின் தொடர்ந்து அழைத்த காலை உமையாளோடு இறைவர் விடைமேல் எழுந்தருளி அவருக்கு மெய்ம்மையை உணர்த்தலுற்றார்: **"நீ முன்பே நமக் குத் தொண்டன் நீ பிறர்பால் வைத்த பற்றின் காரணமாக நம்முடைய கட்டளைப்படி இவ்வுலகிற் பிறந்தனை. துன்பமிக்க வாழ்க்கையோடுள்ள தொடர்பினை யறுப்பான் அந்தணர்முன் வழக்குத் தொடர்ந்து நின்னைத் தடுத்தாண்டோம்"** என்றனர்.

இதனைக் கேட்டவுடனே பெற்ற பசுவின் கனைப்புக் கேட்ட கன்றுபோல நாவலூர் நம்பி உடம்பு முழுவதும் புளகங் கொண்டு கைகளைச் சென்னிமேல் வைத்துத் தொழுது கொண்டு, **"தமியேனை வலிய ஆட்கொண்டது கூத்தப் பெரு மானாகிய உம்முடைய செயலா?"** என்று கூறி வியப் புற்ற னர். விசும்பிடை ஐந்தெழுத்தொலி நிறைய விண்ண வர்கள் பொழிந்த பூமாரி நிலமிசை நிறைய, உலகத்தாருக்கு மகிழ்ச்சி பொங்க, மந்திரவொலிகள் எங்குந் தழைப்ப, ஒலை காட்டி ஆண்டவர் நம்பியை நோக்கிக் கூறுவார், **"நீ வன்மை பேசினமையால் வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை. அன்பொடு பாடும் பாடலே நமக்கு அருச்சனையாகும். ஆதலால், இந்நிலவுலகில் நீ செந்தமிழ்த் திருப்பாடல் பாடுக"** என்றனர்.

**"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்**
**பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க**
**அர்ச்சனை பாட்டே யாகு மாதலால் மண்மே னம்மைச்**
**சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"**

அப்போது சுந்தரமூர்த்திகள் கூத்தியற்றும் சிவபெருமான் திருவடிகளைக் கும்பிட்டு நின்று கூறுவார்: **"அந்தணனாய் வழக்கினால் வென்றென்னை ஆட்கொள்ள, வந்த பெருநன்மை யறியாத வெனக்கு உண்மையுணர்ச்சியுய்யக் கொண்ட குற்ற மற்ற அமுதே! இப்போது நாயேன் நின் குணப் பெருங்கட லில் எதனை யறிந்து என் சொல்லிப் பாடவல்லேன்"** என்றனர்.

**"வேதியனாகி என்னை வழக்கினால் வெல்ல வந்த**
**வூதிய மறியர் தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட**
**கோதிலா அமுதே இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்**
**யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகே னெனமொ ழிந்தார்."**

அப்போது இறைவர் அன்பரைத் திருவருளினால் நோக்கி, **"முதலில் நீ என்னைப் பித்தனென்றே கூறினை. ஆதலால், என் பெயர் பித்தனென்றே யமைத்துப் பாடுக"** என்றனர். உடனே நம்பியும் அண்ணலைப் பாடத் தொடங்கினர். அடியவர்பால் மெய்த் தாயினு மினிய மாதொருபாகனை இந் நிலவுலகிலுள்ள உயிர்களெல்லாம் அறிந்துய்யும் பொருட்டுப் பாடுவார்,

**பித்தாபிறை சூடீபெரு**
**மானேயரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக்**
**கின்றேன்மனத் துன்னை**
**வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூரருட் டுறையுள்**
**அத்தாஉனக் காளாய்இனி**
**அல்லேனென லாமே**

என்னும் பெயரிய திருப்பதிகத்தை, இந்தளம் என்னும் இனிய பண்ணிற் பாடி முடித்தனர். இப்பதிகமே சுந்தரர் திருவாயினின்றும் மலர்ந்த முதல் திருப்பதிகம் ஆகும். சுந்தரர் இறைவனைப் **'பித்தன்'** எனக் கூறியது வன்மையான தும் குற்றமானதுமாகிய மொழியாகும். இதனையே முதலாக வைத்துப்பாடுக என்றருளியது இறைவனின் பெருங்கருணை யாகும். **"அற்றம் மறைக்கும் பெருமை"** (குறள் 980) என்பர் திருவள்ளுவர். அப்பெருமையறிய நின்ற பதிகம் இதுவாத லின், **'பெரிதாம் திருப்பதிகம்'** என்றார். பொருளானும் பயனானும் பெரிதாகிய பதிகம் என்பர் சிவக்கவிமணி யார் (பெரிய.பு. உரை).

அப்போது சிவபெருமானும் "இவ்வாறே பல வகையாக நமது புகழை உலகினிற் பாடுக" வென்றருள் செய்தனர். திருப் புத் தூரிலே மணஞ் செய்யவிருந்த பெண் சுந்தரமூர்த்தி யையே ஓயாது நினைந்திருந்து அப்புண்ணியத்தால் சிவலோக மெய்தினள். சுந்தரமூர்த்திகளும் திருநாவலூரை யடைந்து திருப்பதிகம் பாடித் தொண்டாற்றிடத் தொடங்கி னார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருமலைச் சருக்கம் - (205 - 224)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# திருவாசகத் தெளிவு -
# துஞ்சல் பிறப்பறுப்பான்



நாம் எல்லோரும் இறைவனை தினமும் ஏதோ ஒரு விதத்திலாவது நினைக்கின்றோம். சிலர் இறைவனை வாழ்த்துவர். சிலர் இறைவனைத் தூற்றுவர், சிலரோ கடவுள் இல்லை என்று கடவுளைப் பற்றியே பேசுவர். இறைவனோடு அன்பு பூண்டு அவனது அளவில் பெரிய கருணையை உணர்ந்தவர்கள், நின்றாலும், இருந்தாலும், உண்டாலும், உறங்கினாலும் அவனையே எண்ணுவர். அவன் புகழையே பாடுவர். இறை நினைவோடு செய்யும் கருமங்கள் வெற்றி அடையும். காரிய வெற்றிக்கு மட்டுமல்ல புலன்களை வென்று பேரானந்தம் அடையவும் அதுவே உபாயம்.

**"பொறிப்புலன்களைப் போக்கறுத் துள்ளத்தை**
**நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்**
**அறிப்புறு மமுதாயவனேகம்பம்"** என்கின்றார் அப்பர் பெருமான்.

நம் செயல்களால் வினைகள் உருவாகும். வினைகளால் நாம் மீண்டும் மீண்டும் பிறந்து உழல வேண்டும். வினை கழிந்து விரிசடையான் அடியின் கீழ் என்றும் குறைவில்லாத பேரானந்தத்தை அனுபவிக்க, நாம் செய்யும் வினைகளை, சிவ நினைவோடு செய்தால் இப் பிறவிச் சுழல் அற்றுப் போகும். இப் பிறவி நோய்க்கும் அதுவே அரு மருந்தாகும்.

இதனாலே தான் மாணிக்கவாசகர், வாழ்வியல் கருமங்களை இறை நினைவோடு செய்ய வலியுறுத்திப்பாடினார். அவை பொழுது போக்கு விடயங்களே ஆயினும் அவற்றின் மூலம் சிவப்பொழுதாக்கும் வழியை நமக்கு உரைத்தார். அதிகாலையில் நீராடச் செல்லும் போதும், அம்மானை ஆடும் போதும், பொற்சுண்ணம் இடிக்கும் போதும் இறைவனை எண்ணியபடியே செய்வதற்கு மாணிக்கவாசகர் அருளிய பாடல்களே, எமக்கு வினைகள் சேராமல் காக்கும் அரண்கள் என்பதை நாம் உணர்ந்து அவற்றை ஓதியுணர்ந்து உய்ய வேண்டும்.

இறைவனின் அறக்கருணைகளை வியந்து போற்றிப் பாடும் திருப்பொன்னூஞ்சல் என்னும் "அருட்சுத்தி" அதாவது அருளைக் கொண்டு ஆக்கிய தூய்மை எனும் ஒன்பது பாடல்களும் நாராயணன் முதலிய தேவர்களும் அறியாத இறைவனது திருப்பாதத்தை மாணிக்கவாசகர் தாம் வாழும் ஊராகக் கொண்டேன் என்று எமக்கு தெம்பு தருகின்றார்.

**"நாராயணன் அறியா நான் மலர்ந்தாள் நாயடியேற்கு,**
**ஊராகத் தந்தருளும்"** என்கின்றார்.

தேவர்கள் காணாது விட்டால் என்ன? நாயைப் போன்ற நான் அவனைப் பாடிப் பணிந்து, நெஞ்சம் நெக்கு உருகியதால் அவன் தாள்களையே நான் இருக்கும் இடமாகவே கொண்டேனே! ஊஞ்சல் ஆடும் நீங்களும் அவன்புகழைப் பாடுங்கள் என அறிவுறுத்துகின்றார்.

இன்று நாம் வழிபாடு செய்வதற்காக வேண்டி கோயிலுக்கு சென்றும், புறப்பொருட்களில் புலனைச் செலுத்தி, தேவையற்ற சொற்களால் அவமே காலத்தை கழிய செய்வது எவ்வளவு பெரிய மூடத்தனம்? இப்பிறவியின் பயன் உணரா மானுடராய் இறத்தல் பொருட்டே பிறந்தவராய் இருப்பது தான் தகுமோ? எம் இதயத்துள் இருப்பவனை உணராது இன்னும் எத்தனை கோடி பிறவிகள் உழல உள்ளோமோ?

**"நெஞ்சுள்ளே நின்றமுதம் ஊறிக் கருணை செய்து**
**துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ் பாடிப்**
**புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசலாடாமோ!"**

**திருச்சிற்றம்பலம்**


**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**
**(முதுமாணி - சைவசித்தாந்தம்)**




# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.  www.thennadu.org



**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# அமுதமாகிய மார்கழிப் பெருவிழா!

பண்பாடும் கலாசாரமும் ஆதி காலத்திலிருந்து ஓங்கி வளர்ந்து பண்பட்டிருந்த இந்த மண்ணில் விழாக்களுக்கும் மாநாடுகளுக்கும் பஞ்சம் இருந்ததே இல்லை. காலத்துக்கு காலம் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் போற்றி அதன் பெருமைகளை எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் விழாக்கள் இடம் பெற்றன. இரண்டு மூன்று நாட்களாக மாநாடு போல் நடைபெற்ற விழாக்களும் உண்டு. ஆனால் இன்றைய சூழலில் அவ்வாறான விழாக்கள் வெகுவாக குறைந்துவிட்டன என்றே சொல்லலாம்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இப்போது சில விழாக்கள் இடம் பெற்றாலும் பேரெழுச்சியுடன் சைவத்துக்கும் தமிழுக்கும் பொதுவாக அறிஞர்கள் ஒன்று கூடி காலம் தவறாமல் நடத்துகின்ற விழாக்கள் என்பது இப்போதைக்கு இங்கு எதுவும் இல்லை என்பதே வருந் தத்தக்க உண்மை.

அதிக செலவோடு இவ்வாறான விழாக்களை நடத்துவதால் என்ன பயன்? என்று சிலர் கேட்கக்கூடும். இவ்வாறான விழாக்களை நடத்துவதன் ஊடாகவே எமது கலை கலாசார பண்பாட்டு சமய கோலங்களை அடுத்த தலைமுறை அறியத்தக்க வகையில் நாம் உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும் என்பதை அவர்கள் உணர வேண்டும். நம் பெருமைகளையும் தொன்மைகளையும் சமய உண்மைகளையும் எம் வருங்கால தலைமுறைக்கு இவ்வாறு நாம் சொல்லிக் கொடுக்காவிட்டால் வேறு யார் இப்பெரும் பணியை செய்வார்கள் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு தான் வருடம் தோறும் டிசம்பர் 25ஆம் தேதி தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து மார்கழிப் பெருவிழாவைக் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக பேரெழுச்சியுடன் கொண்டாடி வருகின்றது. நான்காவது ஆண்டாக இம்முறையும் எதிர்வரும் டிசம்பர் 25ஆம் தேதி யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் மிகப்பெரும் பொருட்செலவோடும் அருட்பெருக்கோடும் மார்கழிப் பெருவிழா முன்னெடுக்கப்பட இருக்கின்றது. தமிழகத்தின் அருளாளர்கள் வருகையோடு, ஆன்மீக பேச்சாளர்களின் பங்குபற்றுதலோடும் நம் தமிழ் வேதங்களாகிய திருமுறைகளை வேழத்தில் ஏற்றி ஊர்வலமாக எம்பெருமானுடன் எழுந்தருளச்செய்து, சிவ பூமியாகிய இந்த மண்ணில் இப்பெருவிழாவை முன்னெடுக்க நம் தென்னாடு செந்தமிழாகமசிவமடம் திட்டமிட்டிருக்கின்றது.

தமிழக அருளாளர்களோடு நம் தேசத்தின் பேராளர்களும் இணைந்து முன்னெடுக்க இருக்கின்ற மார்கழிப் பெருவிழாவுக்கு நீங்கள் எல்லோரும் இணைந்து நம் சமய அடையாளங்களோடு பேரணியாக வரவேண்டும் என்பதே நமது விருப்பமாகும். காலத்துக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான இப்பணியை முன்னெடுக்கின்ற தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்துக்கும் சைவ மாணவர் சபைக்கும் உங்கள் வருகையினால் உந்துதல் அளிப்பீர்கள் என்கின்ற நம்பிக்கை நமக்கு அதிகமாகவே இருக் கின்றது.

மிக முக்கியமான சிறப்பு விடயமாக தன்னலம் கருதாது அற நெறியை மாணவர்கள் மத்தியில் போதிக்கின்ற அறநெறிப் பாட சாலை ஆசிரியர்களில் சேவை மூப்பும் செயல் திறனும் அதிகமாக இருப்பவர்களை இனம் கண்டு அவர்களுக்கு தென்னாடு செந் தமிழ் ஆகம சிவமடத்தின் உயரிய விருதாகிய “மெய்கண்டார் விருது“ வழங்குகின்ற நிகழ்வும் இவ்விழாவில் இடம்பெற இருக்கின்றமை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயமாகும்.

அன்பானவர்களே! தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சி யாலும் திரைத்துறையின் ஆக்கிரமிப்பாலும், நம் பொழுதுகளை வீணாகப் போக்கி தேவையற்ற விடயங்களில் புலனை செலுத்தி நிலை இன்பமாகிய இறையின்பத்தை அனுபவிப்பதையும் அதை அடைவதையும் மறந்து உழலும் நாம் வருடத்தில் ஒரு நாளை நம் சமய எழுச்சிக்காக கொடுப்பதில் தவறு ஏதும் இல்லை. இது அமுதம் போன்ற அருமருந்து என்று உணர்ந்து ஐம்பூதநாதரின் திருவடிகளை இறுகப் பற்ற முனைவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**சைவசமயம் இந்துவென்று அழைக்கப்படுவதால் ஏற்படக் கூடிய தீமை யாது?**

ஆதிசங்கரர் தாபித்த ஏகான்மவாத சுமார்த்தமதத்தில், பெண்களுக்கு முத்தி இல்லை என்னும் கொள்கையோடு, பிராமண குலத்தில் பிறந்த ஆணுக்கே முத்திக்குரிய தகுதி உண்டாகின்றதென்று ஆதிசங்கர் கொள்கை முதன்மை உடையது. நான்காம் வர்ணத்தார் வேதத்தைக் கேட்டால் காதுகளில் கொதிக்கும் ஈயத்தை ஊற்றும்படி ஆதிசங்கர் தமது பிரம்மசூத்திரப் பாடியத்தில் எழுதி வைத்துள்ளார். ஆனால், சைவசமயத்தில் காரைக்கால் அம்மையார் முதலிய பலர் முத்தி பெற்றுள்ளனர். சிவஞானசித்தியார் என்னும் சிவாகம ஞானகாண்ட சைவசித்தாந்த நூலில், வேதம் அனைவருக்குமானது என்று அருணந்தி சிவாசாரியப் பெருமான் அருளிச்செய்துள்ளார். இந்துவென்னும்போது, ஆதிசங்கரின் இக்கொள்கைகளையும் ஏற்ற நிலை உருவாகும். ஒருவர் பிரம்மசூத்திரப் பாடியத்தைக் காட்டி, உங்கள் சமயத்தில் பெண்களுக்கு முத்தியில்லையாமே? என்று வினாவினால், பதில் கூறமுடியாத நிலை இந்துவென்பதால் உண்டாகும். ஆனால், சைவசமயம் என்று தெளிவாக இருந்தால், அது சுமார்த்தமதக் கொள்கையேயொழிய சைவசமயக் கொள்கையன்று சைவசமயத்தில் பெண் நாயன்மார் பலர் உள்ளனர். அவர்கள் யாவரும் முத்தி பெற்றவர்களேயாகும். அத்தோடு, நாயன்மார் பலரும் தம் மனைவியருடனேயே முத்தி பெற்றதாகப் பெரிய புராணம் கூறுகின்றது. எனவே, பெண்களுக்கு முத்தி இல்லையென்பது சுமார்த்தமதமேயொழிய, சைவசமயம் அன்று. பிரம்மசூத்திரப் பாடியம் சைவசமய நூலன்று என்று உறுதியாகப் பதிலளிக்க முடியும்.

பகவத்கீதை என்பது சுமார்த்தமதத்தரின் முப்பெரும் நூல்களில் ஒன்றாகும். வைணவர்களுக்கு அந்நூல் சுமார்த்தமதத்தார் அளவுக்கு முதன்மை நூலன்று. இராமனுச வைணவர்களின் முதன்மை நூல் வைணவ ஆகமங்களும் தமிழ்த் திவ்ய பிரபந்தங்களுமேயாகும். கௌடிய வைணவம் முதலிய ஒருசில வைணவப் பிரிவுகளுக்கே பகவத்கீதை தலையாய நூலாகும். சைவசமயத்தவர்களுக்கு பகவத்கீதை அருள் நூலன்று. சிவாகம ஞான காண்ட மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான சிவஞானசித்தியார், பகவத்கீதையை மயக்க நூலென்று கண்டிக்கின்றது. பகவத்கீதையில் பெண்கள் பாவயோனிப் பிறப்பாளர் என்று கூறப்படுகின்றது. இக்கூற்றினைச் சைவர் ஏற்றால், காரைக்கால் அம்மையார் மங்கையர்கரசியார் முதலியோர் யாவரும் அந்நிலையை எய்துவர்! ஆனால், இந்துமதப் புனிதநூல் என்னும் பெயரில், இக்காலத்தில் சுமார்த்த மதத்தின் முதன்மை நூலாகிய பகவத்கீதை, மயக்கநூல் என்று கண்டித்த சைவசமயத்தவர் தலையிலும் புனித நூலென்றே திணிக்கப்படுவதாயிற்று. காரைக்கால் அம்மையார், மங்கையர்கரசியார் யாவரையும் பாவயோனியர் என்று ஏற்ற நிலைக்குச் சைவரை உள்ளாக்கியுள்ளது. சைவசமயம் என்று தெளிவாக நின்றால், "பகவத்கீதை எங்களைப் பொறுத்தவரை ஒரு மயக்கநூல்" என்று அந்நூலையும் அந்நூல் கூறும் பாவயோனி முதலிய கோட்பாடுகளையும் புறந்தள்ள முடியும். கொள்கையளவில் பகவத்கீதை முதலியன சைவசமயத்தோடு பெருத்தளவு வேறுபட்டிருப்பினும் அவையாவும் விரிவஞ்சி இங்கு விளக்கப்படவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதே இங்கு எடுத்தாளப்பட்டுள்ளதென்க. நூல்களுக்கிடையேயுள்ள உயர்வு தாழ்களைப் பெரியபுராண சூசனத்தில் நாவலர்பெருமான் விளக்கியுள்ளார். இவையெல்லாம் உணராது சைவசமயத்தார் வீழ்ந்திருப்பது இந்துவென்ற இடர்நிலையினாலேயாகும். எனவே, சைவசமயம் என்று தெளிவான வரம்போடு தமிழர் உயர்வரேயானால், இவ்வாறு எண்ணற்ற வழிகளில் வரும் பாதகங்களை தவிர்க்க முடியும்.

**இந்துவென்று பாவித்தால் பிராந்திய அரசியலிலும் உலக அரசியலிலும் தமிழர் நலன்பெற வழிவகுக்கும் என்று ஒருசாரார் கூறுகின்றனரே? அதனை ஏற்கலாமா?**

சமணமதத்தாரும் பௌத்தமதத்தாரும் தாம் இந்துமதத்தில் அடக்கமாட்டோம் என்று இந்திய நீதிமன்றத்தில் வழங்காடி, ஓரளவு சலுகையான தீர்ப்புக்களைப் பெற்றுள்ளனர். சீக்கிய மதத்தவர்களும் நீதிமன்ற வழங்குகளினூடாகத் தமது மதத்தின் தனித்துவத்தைப் பேணுவதற்கு முயற்சித்துக் கொண்டுள்ளனர். இராமகிருஷ்ணமிஷன் "தமது அமைப்பு இந்துமத அமைப்பு அன்று, தாம் தனியான மதத்தினர்" என்று நீதிமன்றில் வழக்குத் தொடுத்து, வெல்லமுடியாது போனார்கள். இவர்களின் இச்செயல்களால் எந்தவொரு நட்டமும் இம்மதத்தாருக்கு ஏற்படவில்லை. சமண பௌத்த சீக்கிய மதத்தாரின் உரிமைகள் மேலும் வலுப்பற்றுள்ளனவே தவிர, எந்தவொரு அரசியல் எதிர்ப்பும் காழ்ப்பும் இம்மதங்களின்பால் எழவில்லை. மேலும், தமிழரின் அரசியல் உலகத்தாரால் சமயக்கண்ணோட்டத்தில் அக்கறை செலுத்தப்படும் என்பது பூகோள அரசியலில் பட்டறிவு இல்லாதோர் கூற்றாகும்.

சைவசமயம் என்று ஆணித்தரமாக எமது அடையாளத்தைப் பேணும்போது, காஷ்மீர் சைவசமயிகளுடனும் கர்நாடக வீரசைவர்கள் - இலிங்காயுத சமயத்தவர்களுடனும் மகாராஷ்டிரா முதலிய இடங்களில் உள்ள நாதசைவர்களுடனும், ஆந்திரா தெலுங்குதேசம் கர்நாடகா முதலிய இடங்களில் உள்ள சிவாத்வைத சைவர்களுடம் அதிகளவு பண்பாட்டுத் தொடர்பைப் பேணக்கூடிய சாத்தியக்கூறுகள் எழும். எனவே, சைவசமயம் என்பதனூடாகவும் இந்திய மாநிலங்கள் யாவற்றுடனும் பண்பாட்டுத் தொடர்பைப் பேணமுடியும் என்பது அறிவுடையார் தெளியக்கூடியவொன்றே!

மேலும், கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார் என்பது ஆத்தீகர் யாவரும் ஏற்கும் விடயமேயாகும். ஆத்தீகர்களுக்கே சமயமும் தேவையாகும். கடவுளால் உருவாக்கப்பட்ட அருள்நூல்கள் யாவும் சைவசமயம் என்றே வலியுறுத்தி நிற்கின்றன. கடவுளால் அருளப்பட்ட சைவசமயம் என்னுஞ் சொற்பதத்தைவிடுத்து, உலகத்தாரால் உருவாக்கப்பட்ட சொற்பத்தத்தை ஏற்பதென்பது, கடவுளை நம்பாதார் செயலேயாகும். கடவுளை நம்பாதார் எங்ஙனம் வாழ்வில் மேலோங்க முடியும்? சைவசமயம், சைவ பரிபாலனம் என்றெல்லாம் சைவசமயம் என்னும் சொற்பதத்தைத் தமிழர் தங்கள் தலைமேற் சுமந்து வாழ்ந்த காலத்தில் பீடுடன் துலங்கினர் என்பது வரலாறு. எப்போது சைவசமயம் என்ற சொற்பதங்களை ஒழித்து இந்துவென்று பிரதியீடு செய்யத்தொடங்கினோமோ, அக்காலந்தொட்டு நம் வரலாறு துன்பங்கள் நிறைந்ததாகவேயுள்ளது. சிவபெருமான் அருளிய பெயரைப் புறக்கணிப்பதும் கைவிடுவதும், சிவபெருமானைப் புறக்கணிப்பதற்கும் கைவிடுவதற்கும் நிகராகும். சிவபெருமானைநிந்தித்துத்தக்கன்செய்யமாவேள்வி கெட்டொழிந்தது யாவரும் அறிந்ததே! தமிழர் இவ்வுண்மைகளையெல்லாம் சிந்தித்து உய்வதே கடனாகும்!

**திருச்சிற்றம்பலம்**

# சைவத்தின் கொடையாளர்கள்

## தென்னாடு சிவமடம் - தென்னாடு இதழ்கள் - மார்கழிப் பெருவிழா


திரு. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரக்குமார்


திரு. சிவப்பிரகாசம் விஜயநேசன்


திரு. தெய்வநாயகம் சௌந்தரராசா


திரு. கனகரத்தினம் சுதர்மன்


திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்


திரு. நடராஜா ராஜ்குமார்


திரு. சிவராசா சதீஸ்


திரு. குலசேகரம் ஜெயராஜ்


திரு. தணிகாசலம்பிள்ளை நந்தனன்


திரு. தியாகராஜா ஜெகசீலன்


திரு. தயாநேசன் கர்ணன்


திரு. தனலிங்கம் ஐங்கரன்


திரு. பொன்னம்பலம் சிவபாலன்


திரு. மகேந்திரன் கேதீஸ்வரன்


திரு. சுப்பிரமணியம் சுபதாசன்


திரு. குணரத்தினம் பிரதீபன்


திரு. திருலோகநாதன் சஞ்சீவன்


திரு. நவரத்தினம் தங்கேஸ்வரன்


திரு. சிவராஜா யாதவன்


திரு. கதிர்காமராஜா விஜயராஜன்

புளியங்கூடலைச் சேர்ந்த அமரர்.இராஜேஸ்வரி பாலச்சந்திரன் பிரசாத் மற்றும் அமரர்.பாஸ்கரன் பாலச்சந்திரன் பிரசாத் (எடிசன் கல்வி நிலையம்) அவர்கள் நினைவாக திரு.சதீஸ்கரன் பாலச்சந்திரன் பிரசாத் மற்றும் திரு.சர்வானந்தராஜா பராமநாதன் அவர்கள்.

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு காவியங்கண்ணி உடனுறை வெள்ளடைநாதர்- திருக்குருகாவூர் (திருக்கடாவூர்)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 13ஆவது திருக்கோயில் திருக்குருகாவூர் (திருக்கடாவூர்)



**"மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே"**

அப்பர் பெருமானுக்கு திருப்பைஞ்ஞீலி கோயிலில் பொதிசோறு வழங்கியருளியது போன்று, பசியோடு வந்த சுந்தரருக்கு கட்டமுதும் நீரும் தந்தருள் செய்து பசி போக்கி அற்புதத் தலமே திருக்குருகாவூர் அருள்மிகு காவியங்கண்ணி உடனுறை வெள்ளடைநாதர் திருக்கோயில்.

**அமைவிடம்:** நாகப்பட்டினம், தமிழ்நாடு.

சீர்காழியிலிருந்து தென் திருமுல்லைவாயில் செல்லும் சாலையில் 6 ஆவது கி.மீ இல் வடகால் என்னும் ஊரில், சாலையில் குருகாவூருக்குச் செல்லும் பாதை பிரிகின்றது. (வழிகாட்டிப் பலகையும் உள்ளது.) அப்பாதையில் சென்றால் 1 கி.மீ இல் குருகாவூரை அடையலாம்.

**இறைவர் திருப்பெயர்:** வெள்ளடையீசுவரர், வெள்ளடைநாதர்

**இறைவியார் திருப்பெயர்:** நீலோத்பலவிசாலாட்சி, காவியங்கண்ணி

**கோயில் மரம்:** வில்வம் மரம்

**தீர்த்தம்:** பால் கிணறு, சிவ குளம்

**வழிபட்டோர்:** சம்பந்தர் , அப்பர், சுந்தரர், சேக்கிழார் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.

**பாமாலை:** சம்பந்தர் , சுந்தரர்

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**சுண்ணவெண் ணீறணி மார்பில் தோல்புனைந்
தெண்ணரும் பல்கண மேத்தநின் றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே. (3-124-1)**

**சுந்தரர் அருளிய திருப்பதிகம்**

**இத்தனை யாமாற்றை
யறிந்திலேன் எம்பெருமான்
பித்தனே யென்றுன்னைப்
பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை
மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. (7-29-1)**

**திருத்தலச் சிறப்பு**

சுந்தரருக்கு இறைவன் கட்டமுதும், நீரும் தந்து பசியப் போக்கி அற்புதம் நிகழ்த்திய இடம் **"வரிசைப்பற்று"** என்றும், **"இடமணல்"** என்றும் மக்களால் சொல்லப்படுகிறது. அவ்விடம் தென்திருமுல்லைவாயில் செல்லும் வழியில், இங்கிருந்து



1 கி. மீ. தொலைவில் உள்ளது அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்று உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரருக்கு பொதி சோறு வழங்கும் விழா இத்தலத்தின் சிறப்பாகும். வெயிலின் காரணமாகவும், தண்ணீரின் தாகத் துடனும், பசியாலும் வந்த சுந்தரருக்கும், அவருடன் வந்த அடியார்களுக்கும் சிவபெருமான், வேதியர் வடிவில் தோன்றி, பெரிய பந்தல் ஏற்பாடு செய்து அவர்களை களைப்பாறச் செய்ததோடு, சுவையான குளிர்ந்த நீரையும், பசி தீர பொதி சோற்றினையும் தந்தருளினார். சுந்தரர் உண்டு உறங்குகையில் இறைவர் பந்தலோடு மறைந்தருளினார். சுந்தரர் தூக்கத்தி னின்று எழுந்து **“இத்தனையாமாற்றை யறிந்திலேன்”** எனத் தொடங்கும் பதிகம்பாடி கோயிலுக்குச்சென்று இறைவனை வழிபட்டார். இதனை நினைவுகூரும் வகையில் இக்கோயிலில் சுந்தரருக்கு பொதிசோறு வழங்கும் விழா ஒவ்வோராண்டும் நடைபெறுகிறது. அப்போது பத்தர்களுக்கு உணவு வழங்கப் படுகிறது. தொடர்ந்து மூலவருக்கும், சுந்தரருக்கும் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன.

## திருத்தல வரலாறு

சைவம் தழைக்க பாடுபட்ட சம்பந்தர், மதுரையில் சமணர்களுடன் வாதிட்டு வென்றார். அவருடன் வாதத்தில் தோற்ற சமணர்கள் கழுவேற்றப்பட்டனர். இவ்வாறு சமணர்களை கழுவேற்றிய பாவம் நீங்க சம்பந்தர், காசிக்குச் சென்று கங்கையில் புனித நீராட விரும்பினார். தான் காசிக்கு செல்ல அருளும்படி சீர்காழி தலத்தில் சிவனிடம் வேண்டி னார். சம்பந்தருக்கு காட்சி தந்த எம்பெருமான், அவரை சீர் காழிக்கு செல்ல வேண்டாமென்றும் இத்தலத்தில் அவருக்கு கங்கையை வரவழைத்துக் கொடுப்பதாகவும் கூறினார். அதன் படி இங்கு வந்த சம்பந்தர் சிவனை வேண்டினார். அவருக்கு காட்சி தந்த சிவபெருமான், இங்கிருந்த கிணற்றில் கங் கையை பொங்கச் செய்தார். அதில் நீராடிய சம்பந்தர், பாவம் நீங்கப்பெற்றார்.

இத்திருத்தலத்தின் தீர்த்தமான இக்கிணறு ‘பால்கிணறு’ என்ற பெயருடன் கோயிலுக்கு வெளியே தனிச்சுற்று மதி லுடன் உள்ளது. தை மறைமதி நாளன்று இறைவன் தீர்த் தம் கொடுக்கும் சமயத்தில் இக்கிணற்று நீர் பால் நிறமாக மாறும் அதிசயம் பொருந்தியது. அன்று மட்டுமே பத்தர்கள் இதில் நீராட அனுமதிக்கிறார்கள். மற்ற நாட்களில் இந்த தீர்த்தத்தை திறப்பது கிடையாது. ஆண்டுதோறும் பத்தர்கள் தை அமாவாசை நாளில் இங்கு நீராட பெருமளவில் வருகி றார்கள். மேலும் தைப்பூச நாளில் ஐம்பெரும்மூர்த்திகள் புறப்பாடும் இத்தலத்தில் விசேடமாக கொண்டாடப்படுகி றது. சுந்தரருக்கு இறைவன் உணவும் நீரும் தந்து பசியைப் போக்கிய கட்டமுது தந்த விழா சித்திரை நிறைமதியில் நடைபெறுகிறது.

## திருக்கோயில் அமைப்பு

இத்தலம் இந்நாளில் திருக்கடாவூர் என்று வழங்குகிறது. ஒரு வீதியுடன்விளங்கும் இக்கோயிலில் இராசகோபுரம் இல்லை. கிழக்கில் ஒரு நுழைவாயில் மட்டும் உள்ளது. இறைவன் வெள்விடைநாதர் சதுர ஆவுடையார் மீது சிறிய பாணம் கொண்ட இலிங்க உருவில் கிழக்கு நோக்கி தான் தோன்றி மூர்த்தியாக காட்சி தருகிறார். இறைவியார் காவியங் கன்னி அம்மை தெற்கு நோக்கி காட்சி தருகின்றார். இறைவன் கருவறை சுற்றுத் தெய்வங்களாக ஆலமர் கடவுள் (தட்சினா மூர்த்தி), பெருஞ்சோதியன் (இலிங்கோத்பவர்), நான்முகன், மலைமகள் (துர்க்கை) ஆகியோர் உள்ளனர்.

திருமால், ‘கரியமாணிக்கப் பெருமாள்’ என்ற பெயருடன் தனி சந்நிதியில் வீற்றிருக்கிறார். கருவறை வீதியில் நால்வர் சந்நிதி, நடராசப் பெருமான் சந்நிதி, காசி விசுவநாதர் விசா லாட்சி சந்நிதிகளுடன், சனீசுவரன், மாவடி விநாயகர், சிவலோகநாதர் ஆகிய சந்நிதிகளும் அமைந்துள்ளன. கரு வறைச் சுற்றில் பைரவர், சூரியன், மாரியம்மன், ஐயனார் ஆகியோரின் திருவுருவங்களும் அமைந்துள்ளன. கருவறை வீதியில் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமானும்



தனி சந்நிதியில் வீற்றிருக்கிறார். பொதுவாக முருகன் கிழக்கு திசை நோக்கித்தான் இருப்பார். ஆனால் இங்குள்ள முருகன் தெற்கு திசை நோக்கி காட்சி தருகிறார். தென் திசையை பார்த்திருப்பதால் இவரை, குரு அம்சமாக கருதி வழிபடு கிறார்கள். இவருக்கு வியாழக்கிழமைகளில் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் திருக் கோயிலில் நாள்தோறும் நான்குகால வழிபாடுகளும் நடை பெற்று வருகின்றது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**


பவானி சிவ
அ.வேலுச்சாமி

**பாயிரம் பாடல் 7**

**செப்பலுற்ற பொருளின் சிறப்பினால்**
**அப்பொ ருட்குரை யாவரும் கொள்வரால்**
**இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்**
**மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால்**

**வி. உரை:** செப்பலுற்ற பொருள் - ஒருவன் சொல்லப் புகுந்த பொருள். மெய்ப்பொருட்கு உரியர் - உண்மை காணும் விருப்புடைய பெரியோர். மெய்ப்பொருள் - இறைவன் எனக்கொண்டு, அவனுக்குரியார் அவன் அடியர் என்றலுமாம் என்று சிவக்கவி-மணி ஐயா அவர்கள் உரையில் கூறியுள்ளார்கள்.


**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

**பொருள்**

சொல்லால் பெறப்படும் பொருள் சிறந்ததனால், அதனைச் சொல்லும் சொல் சிறந்ததல்லாவிட்டாலும் அதுபற்றி இகழாது, பொருளின் சிறப்பையே நோக்கி அப் பொருளைச் சொல்லும் சொல்லை யாவரும் கைக்கொள்வர். இதனுள்ளே குறித்த அடியார்களது வரலாறும் பண்புமாகிய பெரும் பொருளுக்கு எனது சொல் சிறிதேயானாலும், உண்மைப் பொருளையே உணரும் உரிமையுடன் பெரியோர் இதனை அந்த மேன்மை பற்றிக் கைக்கொள்வர்.

**சிவஞானபோத அவையடக்கம்**

**தம்மை யுணர்ந்து தமைஉடைய தன் உணர்வார்**
**எம்மை உடைமை எமையிகழார் - தம்மை**
**உணரார் உணரார் உடங்கு இயைந்து தம்மில்**
**புணராமை கேளாம் புறன்.**

இந்தப் பாடலுக்கு நம்முடைய பேராசிரியர் முனைவர் சிவத்திரு, ந. இரா. சென்னியப்பனார் அவர்கள் உரையில் கூறியுள்ளதாவது உடைப்பொருள் இருவகைப்படும் 1. அடிமை 2. உடமை ஆகியவை. உயிர்ப்பொருள் எல்லாம் அடிமைப் பொருள். இறைவனுக்கு அடிமைப் பொருளாக விளங்கும் உயிர்கள் முதலில் தம்மியல்பினை உணரவேண்டும். பின் தம்மை உடையானாகிய தலைவனை உணரவேண்டும். அவ்வாறு உயர்ந்தோர் மெய்யுணர்வு உடையவர் ஆவார். அவ்வாறு மெய்யுணர்வு உடையவர் எம்முடைய குற்றங்களை நீக்கிக் குணம் கொண்டு பாராட்டுவர். எம்மையும் உடைமைப் பொருளாகக் கொண்டமையால் பாராட்டுவதன்றி இகழமாட்டார். ஆதலால் எம்மால் செய்யப்படும் இந்நூலையும் ஏற்றுக் கொள்வர். உயிராகிய தம்மையும் உடையானாகிய இறைவனையும் உணராதவர் தங்களுக்குள் கருத்து வேறுபாடு கொண்டு மாறுபட்டிருப்பர், ஆதலின் அத்தகை-யோர் எம்முடைய நூலையும் இகழவே செய்வார். அவ்வாறு இகழ்ந்துரைப்போர் உரையை யாம் ஒரு பொருளாகக் கொள்ளமாட்டோம். சிவபெருமானுக்குத் தாம் அடிமை என்று உணரமாட்டாதவர் புறச்சமயத்தார் ஆவர்.

மேன்மையால் - பொருளின் மேன்மையால் உரை பொருளுக்கு ஏற்பத் தகுதியற்றதாயினும் பொருள் மேன்மையுடையது என்பதாம்

இப்பொருட்கு - இப்புராணத்தில் போந்த பொருளுக்கு இப்புராணத்தில் போந்த பொருள் என்பது எந்தம் பெருமக்களாய நாயன்மார்களின் பெருமையே

**“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு” (குறள்)**

**பாடல் 8**

**மேய விவ்வுரை கொண்டு விரும்புமாம்**
**சேய வன்திருப் பேரம்பலஞ் செய்ய**
**தூய பொன்னணி சோழன் நீழிபார்**
**ஆய சீர்அந பாய னரசவை**

**பொருள்:** செம்மேனி எம்மானாகிய நடராசப் பெருமானுடைய திருப்பேரம்பலமாகிய சபையைப் பொன்னினால் வேய்ந்து அணிசெய்த சோழர் பெருமானாகிய, உலகிலே நீடூழி நிலைத்த புகழும் சிறப்பும் உடைய அநபாயச் சோழச் சக்கரவர்த்தியாரது அரச சபையானது மேலே கூறியபடி சிறந்த பொருளைத் தன்னுள்ளே மேவப்பெற்ற இவ்வுரையை ஏற்றுக்கொண்டு விருப்பத்துடன் நிகழச் செய்வதாகும்.

**வி. உரை :** அநபாயச் சோழர் செய்க எனக் கேட்டபடியே ஆசிரியர் நூல் செய்தனர் என்பதைத் திருத்தொண்டர் புராண வரலாற்றிலே உமாபதி சிவாச்சாரியார் விரிவாகக் கூறியருளினார். பாடுவித்த அரசன் சிறப்பையும் நன்றிபாராட்டியும் ஆசிரியர் அநபாயருடைய சிறப்பை இப்புராணத்துள்ளே பதினொரு இடங்களில் அமைத்துள்ளார் பேரம்பலம் செய்ய தூய பொன் அணி சோழன் - இப்புராணம் பாடுவித்த அநபாயர் தில்லையிலே பேரம்பலத்திற்குப் பொன்வேய்ந்தார் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படும். பேரம்பலம் வேறு, சிற்றம்பலம் வேறு இரண்டும் வெவ்வேறாய் இறைவன் எழுந்தருளியிருக்கும் தனியிடங்கள்.

தில்லை எல்லையிலும் திருவீதிகளிலும் அவ்வாறே பொன்மயமாக்கும் பல திருப்பணிகளும் செய்தனர் என்று புகழ்ச்சோழ நாயனார் புராணத்தில் கூறியுள்ளார்.

**"மன்னுதிருத் தில்லைநகர் மணி வீதியணி விளக்கும்**
**சென்னிநீடு அநபாயன்" - புகழ்ச்சோழ நாயனார் புராணம் 3949**

**திருநாட்டுச்சிறப்பில்**

**"பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந்து இனிது காக்கும்**
**கொற்றவன் அநபாயன் பொற்குடை நிழற் குளிர்வது" - திருநாட்டுச்சிறப்பு 85**

என்று கூறியுள்ளார்.

**பாயிரம் பாடல் 9**

**அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவரும்**
**தெருளில் நீரிது செப்புதற் காம்எனின்**
**வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய**
**பொருளின் ஆகும் எனப்புகல் வாம்அன்றே**

**பொருள் :** அருள்வழி நிற்கும் தன்மையாயுள்ள திருத்தொண்டின் புகழ் அறிய அரிதென்று உணர்ந்துள்ள நீர் இது செப்புதற்குத் துணியலாமோ? என்பீராகில் மயக்க நீக்கும் மெய்ம்மொழியாலே வானிடத்து அமர்ந்து கூறியருளிய பொருளின் துணையாலே அதுயாம் செப்புதற்கு உரித்தேயாம் என்று துணிந்து கூறுவோம். அவன் மெய்ம்மொழி கூறித் துணைசெய்த அப்பொழுதே.

**வி-உரை :** அருளின் நீர்மைத் திருத்தொண்டு - அருளின் நீர்மைத் திருத்தொண்டு என்பதற்குச் சிவக்கவிமணி ஐயா அவர்கள் பிறிதொன்றிலும் படாது அருள்வயப்பட்டு அவ்வழியே நிற்கும் திருத்தொண்டு எனறும் "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்க" என்ற விதிப்படி உள்ள அடிமைத்திறம் என்று கூறியுள்ளார்கள்.

மெய்ம்மொழி வான் நிழல் கூறிய பொருள் : 1. வானின்றும் நிழலாய்க் கூறிய மெய்ம்மொழிப் பொருள் 2. மெய்ம்மொழி வான் நிழல் உண்மையே. மொழிபவன் சத்தாகிய இறைவனுடைய நிழல், வெளிப்படாத நிலை-மறைந்து நின்று கூறிய நிலை. 3. வான்நிழல் கூறிய மெய்ம்மொழியும் பொருளும் என்றுமாம்.

**நிழல் :** ஒரு பொருளின் சாயலாய்க் காணப்பட்டு அப்பொருளை அனுமான அளவையால் அறிவிப்பது.

சிவக்கவிமணி ஐயா அவர்கள் வெருளின் மெய்ம்மொழிவான் என்பதற்கு இறைவன் என்றும் நிழல் - என்பதற்கு அவனது திருஉருவின் பிரதிபிம்பமாகிய நம்பிகள் என்றும், அருளிய பொருளின் என்பதற்கு திருத்தொண்டத்தொகையின் துணையாலே என்றும் கூறியுள்ளார்கள். நம்பிகள் இறைவனது திருஉருவின் பிரதிபிம்பம் - சாயை என்பது

**"கயிலை நாயகன் காமரு தன் உருப்**
**பயிலும் ஆடியில் பார்த்து அங்கு அழைத்தலும்**
**வெயில்செய் வெங்கதிர் கோடி விராய்எனச்**
**செயிர் இலாத மெய்த்தேசொடும் தோன்றினான்"**
**(பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம் - 1)**

இந்தப் பாடல் மூலமாகப் பேரூர்ப்புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இப்பாடலுக்கு நம்முடைய ஆசிரியப் பெருமகனார் புலவர், சென்னியப்பனார் அவர்கள் உரையில் குறிப்பிடும் போது கயிலையில் வீற்றிருக்கும் இறைவன் தன் வடிவத்தைப் பார்க்கும் கண்ணாடியில் கண்டு அழகிய அவ்வுருவத்தை அழைத்தார். ஒளிவிடுகின்ற கோடி சூரியர் ஒன்றாகச் சேர்ந்ததைப் போலக் குற்றமில்லாத ஒளிமிக்க வடிவோடு தோன்றினார்.

காமரு - அழகுபொருந்திய, ஆடி-கண்ணாடி வெயில்செய் வெங்கதிர் - ஒளிசெய்கின்ற சிறந்த கதிர் என்று உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். பொருள் உலகெலாம் என்று எடுத்துக் கொடுத்த முதல் மொழியாகிய ஊதியம்.

புராணம் பாடத் தொடங்கும் முன் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் நடராசப் பெருமான் திருமுன்பு நின்று வணங்கி **"அடிகளே! உன் அடியர் சீர் அடியேன் உரைத்திட இடர் கெடுத்து அடி எடுத்துத் தருவாய்"** என்று பிரார்த்தித்தனர்.

**"அலைபுனல் பகிரதி நதிச்சடையாட வாடர வாடநின்று**
**இலகுமன்றினில் ஆடுவார் திரு வருளினால் அசரீரிவாக்கு**
**"உலகெலா" மென அடியெடுத்து உரை செய்த பேரொலி ஓசைமிக்கு**
**இலகு சீரடியார் செவிப்புலத்து எங்குமாகி நிறைந்ததால்"**

என்று உமாபதி சிவாச்சாரியார் திருத்தொண்டர்புராண வரலாற்றில் கூறியருளியது காணலாம்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# சங்கரன் தாள் மறவாமை பொருள்



பேராசிரியர் சிவத்திரு.
ஸ்ரீ.பிரசாந்தன்
தமிழ்த் துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்



பல்திறப்பட்ட சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறும் சைவக்காப்பியம் பெரியபுராணம், வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களும், வெவ்வேறு பிரதேசங்களைச் சார்ந்தவர்களும், வெவ்வேறு தொழில்கள் புரிந்தவர்களும், வெவ்வேறு வயதினர்களும் இக்காப்பியத்துள் உலவுகின்றனர். இவ்வாறு, முதலில் வேறுபட்ட சமய, தத்துவங்களைச் சார்ந்து நின்ற சிலரும் பின்பு சிவனடியார்களாக விளங்கிய செய்திகளும் பெரியபுராணத்துள் பேசப்பெற்றுள்ளன. புறக்கோலத்தில் பௌத்த துறவியாலே விளங்கிய ஒருவர், சிவனை வழிபட்டு அருள் பெற்ற வரலாறு சாக்கிய நாயனார் புராணத்துள் சேக்கிழாரால் தரப்பெற்றுள்ளது. பிற பெரியபுராண நாயன்மார் வரலாறுகளை விடவும் சாக்கிய நாயனார் வரலாறு சில வழிகளில் தனித்தன்மை உடையது.

பதியைப் பசுக்கள் அடைவதற்கான வழிகள் பல உள்ளன. இவற்றுள் ஞான வழியும் ஒன்றாகும். அறிவால், பதியை நோக்கிய வழியைத் தீர்மானித்து அறிவே துணையாய் பயணிக்கும் பக்குவப்பட்ட ஆன்மாக்களின் நெறியையும் சைவம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, சைவநெறியின் பல்வேறு கோட்பாடுகளுக்கான உதாரண புருடர்களை எடுத்துக் காட்டும் பெரிய புராணம், அறிவாராய்ச்சியால் இறையை நோக்குகின்ற ஆன்மாக்களது நிலையையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. இவ்வாறு, அறிவாராய்ச்சியின் நிறைவில், முழுமுதற் பரம்பொருளாகச் சிவபெருமானைக் கொண்ட ஓர் அடியாரின் வரலாறே சாக்கிய நாயனார் புராணம் எனலாம்.

சாக்கியர், சாதாரண மனிதர்கள் பிறரைப் போல அல்லாமல், இப்பிறப்பிறப்பின் தொடர்ச்சியால் துயருற்று, இதனைக் களை வழி எது என்பதை அறிய முனைந்தவர். அதாவது, நிலையாமை குறித்த வெறுப்புணர்ச்சியும், நிலைத்த தொடர்பிலான தேடுதல் எண்ணமும் அவரிடம் இருந்துள்ளது.

**“…மிக்க பொருள் தெரிந்துணர்ந்து
கேளாகிப் பல்லுயிர்க்கு மருளுடையராய்க் கெழுமி
‘நீளாது பிறந்திறக்கு நிலையொழிவேன்’ என நிற்பார்”**
**- பெரிய புராணம்**

என்பது சேக்கிழார் வாக்கு. பிறப்பிறப்பைத் தொலைப் பதற்கான வழியை அறிவின் துணைக் கொண்டு ஆராயப் புகுந்த சாக்கியர், இதற்கென திருச்சங்க மங்கையிலிருந்து

காஞ்சி மாநகரத்தை அடைந்தார். அப்போது, காஞ்சி மாநகரில் பல்வேறுபட்ட தத்துவக் கோட்பாட்டாளர்களும் நிறைந்திருந்தனர் என்பதும், அவர்கள் அறிவாராய்ச்சி முயற்சிகளிலும், விவாதங்களிலும் ஈடுபட்டன் என்பதும் கருதத்தக்கன.

இவ்வாறு, அறிவு வழியில், புலனுகர்ச்சிக்கு அப்பாலான விடயங்களைக் குறித்துச் சிந்திக்கின்ற பல தத்துவவியலாளர்களும் குழுமியிருந்த காஞ்சிக்கு சென்ற சாக்கியர் முதலில் பௌத்த தத்துவத்தைச் சார்ந்து ஒழுகினார். இதனால் பௌத்த துறவியர் அணிகின்ற துவராடையைத் தாமும் அணியத் தலைப்பட்டார். அறிவாராய்ச்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டுவந்த சாக்கியருக்கு, ஒருநிலையில் பௌத்த தத்துவத்தின் போதாமை வெளிப்பட்டது எனலாம். **"சாக்கியர்தம் அருங்கலை நுலோதியது தன்னிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல"** என்பது அவரது ஆராய்ச்சிக்குப் புலப்பட்டது. பல தத்துவக் கோட்பாடுகளையும் ஆராய்ந்து நோக்கிய அவர், ஈற்றில் சைவசமய நெறி கூறிய தத்துவத்திலேயே திருப்தி அடைந்தார். பசு, பசு செய்யும் தொழில், இத்தொழிலின் பயன், இப்பயனைச் சேர்ப்பிக்கும் பதி ஆகிய விடயங்களுக்கான தொடர்பும், இவற்றின் நிலையும் சைவத்தில் பேசப்பெற்றுள்ளதுபோல் சிறப்பாகப் பிற சமயத் தத்துவங்களிற் பேசப்பெறவில்லை எனச் சாக்கியர் கருதியுள்ளார்.

**"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையாற் பொருள் சிவன் என்றருளாலே உணர்ந்தறிந்தார்"
(3640)**

இவ்வாறு, சாக்கிய நாயனார் புராணத்தில் சேக்கிழார் கூறியுள்ள கருத்துகள், சைவசித்தாந்த சாத்திர வரலாற்றில் முக்கியத்துவமுடையவை, ஏனைய சமய, தத்துவக் கோட்பாடுகளை விடவும் சைவங் கூறும் தத்துவம் எவ்வாறு முதன்மையுடையது என்பதனை, பிற சமயத்தவரொருவர் ஆராய்ச்சி செய்வது போன்ற பாவணையிற் செய்து, இவ்விடம் காப்பியத்திற்குப் புதிய பரிமாணம் சேர்க்கின்றது எனலாம். இவ்வகையில் தம் சமயத்தை நிலைநிறுத்தி, புறச்சமயங்களைக் கண்டிக்கும் பின்னைய தத்துவ நூல்களுக்குச் சேக்கிழார் வழிகாட்டியிருப்பதும் நினையத்தக்கது.

பெரியபுராணக் காப்பியம் சுட்டுகின்ற மெய்யடியார்களில் இருந்து, சாக்கிய நாயனார் வேறுபடும் இடங்களுள், அவர் கொண்டிருந்த திருக்கோலமும், அவர் வழிபாட்டு நெறியாக ஏற்றுக் கொண்ட கல்லெறிதலும் முக்கியமானவையாகும். பௌத்த தத்துவத்தில் இருந்து, சமயநெறி சார்ந்து நின்ற சாக்கியர், தமது பௌத்த துறவியர்க்குரியதான துவராடையைக் களைய வேண்டுமென்னும் ஊக்கத்தைப் பெறவில்லை. புறத்தில் பௌத்த துறவி போலவும் அகத்தில் தூய சிவனடியாராகவும் விளங்கினார். தோற்றத்தில் பௌத்தராகவே விளங்கியமையாலேதான் அவர் சாக்கியராக மாறிய பிறகும், பௌத்த துறவுக் கோலத்தைக் களையாமைக்குரிய காரணம், எக்கோலத்தில் வழிபட்டாலும் சிவனருளைப் பெறலாம் எனும் உண்மையை உணர்ந்தமையே ஆகும்.

**"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாம்
மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள் என்றே
துன்னிய வேடந்தன்னைத் துற வாதே தூய சிவந்
தன்னை மிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார்" (3641)**

இவ்வாறே இவர் வழிபாட்டு நெறியும் புதுமையானதாகும். சிவலிங்கப்பெருமானை வணங்கிவிட்டு உண்ணுவதனைத் தமது கொள்கையாகக் கொண்ட இவர், ஒரு நாள் எவ்வாறு வழிபாடியற்றுவதெனத் தெரியாத நிலையில், கல்லை அன்போடெறிந்து வழிபாடு இயற்றினார். களியுவகையினால் செய்யப்பெற்ற இச்செயலே இவர் வழிபட்டு நெறியாயிற்று. இறையருளாலேயே தாம் இந் நெறியை வரித்துக் கொள்ள நேர்ந்ததென்று சாக்கியர் கருதினார்.

**"...சிவலிங்கங் கண்டு மனம்
நீடோடு களியுவகை நிலைமை வரச் செயலறியார்
பாடோர் கற்கண்டதனைப் பதைப்போடு மெடுத்தெறிந்தார்" (3644)**

எவ்விதமான புறக் கோலத்தோடும், எவ்வகையான நெறியில் வழிபட்டாலும் உண்மை அன்பு உளத்திருப்பின் சிவன் அருள் பெறலாம் என்பதை சாக்கிய நாயனார் புராணம் உணர்த்துகின்றது. பிற சமயத்தவரின் கோலத்தோடு வழிபாடியற்றினும் சைவம் ஏற்றுக் கொள்ளுமெனும் செய்தி இச்சமயத்தின் பரந்த சமரச மனப்பாங்கைக் காட்டுகின்றது.

**அறுசமயத் தலைவராய்
நின்றவருக் கன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம்
வடிவினால் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங்
கண்டுவந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிறம்
அறிந்தபடி வழுத்துவாம்**

**திருச்சிற்றம்பலம்**



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# We Must Preserve Our Ancient Tamil Excavation Sites

You may not know but Tamil Nadu is filled with hundreds of ancient sites that contain vast amounts of rich history that would be beneficial to study to gain a better understanding of our ancestors and culture. However, people are not giving their strongest efforts to unearth and study these sites and much information is not even available to the public. This must change immediately so our history is not erased or tampered with. Governments whether state or national in India should take greater concern and invest in unearthing and studying these ancient sites so we Tamils can truly begin to understand the wealth of our ancestors and their contributions to the world. Two such major excavations in Tamil Nadu are Adinachanallur and Keezhadi. Specifically, excavations at Keezhadi have been halted since 2017 with no strong or real reason as to why and more importantly proper reports on the excavation have still been yet to be published. This is extremely concerning, as it prevents our people from fully understanding and celebrating ou true ancient history.

Adichanallur and Keezhadi are two of Tamil Nadu's most significant archaeological sites, providing invaluable insights into ancient Tamil culture and history. Adichanallur, an ancient city dating back to a proven period between 1000 BCE and 600 BCE, with some reports suggesting an earlier timeline, is one of India's oldest excavation sites. Among its findings were golden diadems, iron weapons, agricultural tools, and intricately designed bronze artefacts, reflecting the technological and artistic advancements of the period while offering insights into societal practices and cultural priorities. Located near the ancient Sangam seaport of Korkai and the Tamirabarani River, Adichanallur's proximity to remains of other cultures suggests it could have been the centre of an ancient trade link, enriching our understanding of the interconnectedness of ancient civilisations. Similarly, Keezhadi, located near the Vaigai River in Sivaganga district, about 12 km southeast of Madurai, has unearthed evidence of a literate and urbanised Tamil civilisation from the 6th century BCE to the 3rd century BCE. Excavations revealed brick walls, roof tiles, skeletal tools, Tamil-inscribed plates, iron Vels, and water management systems, showcasing a highly advanced settlement. The extensive use of fired bricks, large building complexes, and some inscriptions pointing to connections with the Indus Valley civilisation reinforce Keezhadi's significance. Together, Adichanallur and Keezhadi highlight the technological, cultural, and societal advancements of ancient Tamil Nadu and the enduring legacy of Tamil culture.

Clearly, these two sites, along with many others across India and Sri Lanka, hold a wealth of knowledge about our ancient ancestors. It is imperative to ensure that more research is conducted on these sites, as losing our history would mean losing a vital part of our identity. Everyone must do their part to prevent this from happening and safeguard our heritage for future generations.



# Thiruneelakanda Nayanar, 'The Pinnacle of Patience and Devotion'



Srisankarshan
Srisatkunarajah
English Eeditor
2023 Batch,
Jaffna Hindu College

As the first in the saintly 63 of the Saivite tradition, Thiruneelakandar is one of the few that shine as bright. A potter by trade, he carved his immortality not with just literature but with steadfast faith, boundless patience, and extraor dinary devotion to Lord Shiva. Hailing from Chidam baram, a town reverberating with the cosmic dance of Nataraja, Thiruneelakanda's life exem plifies the triumph of spiritual steadfastness over worldly trials and reminds the Sivanadiyargal of today, just how mundane the most pious of the tonne once were.

## A Life Forged in Devotion

Thiruneelakanda's life revolved around his craft, which he offered as a token of servitude to Sivaperuman, as he was a man who preferred the toil of hard physical labour. The clay pots he shaped were not mere vessels but symbols of his humility and devotion, evident from his affiliate philosophical constructs. He believed that the true purpose of labour was to glorify the divine. Despite his modest means, his faith in Shiva remained unshakeable, a testament to the universality of devotion transcending societal and economic boundaries, the first sociological lesson penned in the Periyapuranam.

## The Ordeal and the Miracle

The cornerstone of Thiruneelakanda's legacy lies in his response to an extraordinary trial. According to the Periya Puranam, Thiruneelakandar was originally a man, weak to the attraction of

so-called whims of fleeting pleasures. Once he spent the night with a courtesan and returned home ever so casually, only to be met with an ultimatum of a confrontation at the doorstep by his spouse, who verbalised the phrase, "To touch Us no more in the name of Thiruneelakandam." Contextually, the 'Thiruneelakandam' referred to in the quote is actually the patron of the name, Sivaperuman himself, and by 'Us,' his spouse intended the entirety of womanhood. Respecting those words and with a dawning of subtle sensibilities, Thiruneelakandar, the saint, began his exemplary pledge of austerity and celibacy.

To put his austerity to the test, once a Siva-yogi had dropped off his begging bowl at Thiruneelakandar's manor for safekeeping. When he came back to collect, it appeared as though it had gone missing, much to the yogi's fury! He accused Neelakandar of theft and, stereotypical of him, also presented the couple with a notion for their moral redemption. He proclaimed that Thiruneelakandar and his spouse must unite hands in the temple pond and pronounce an oath, protesting their innocence. Of all things, the potter simply wouldn't do as he swore off the act of even touching the bodies of women as a part of his pledge, hence dragging the matter to the court, constituted by the priestly juries of Chidambaram. The court advised that since the saint wouldn't plead guilty to the charge of theft, he should in fact yield to the yogi's resolve.

After some thought, the saint proposed a notion and wanted to exercise it. Thiruneelakandar and his spouse held each end of a long enough stick and dove into the holy temple tank. Before they had a chance to protest their innocence out loud when they came up from the water, lo and behold, the yogi vanished and took form in the sky as Sivaperuman and Parvathi on their Nanthi mount, instantly restoring both the moral and physical well-being of the couple.

## Literary significance and symbolism

Though primarily remembered for his life and miracles, Thiruneelakanda's story carries profound allegorical significance in Saivite literature. His profession as a potter symbolises the moulding of human life under divine guidance, while the ordeal with his wife reflects the Saivite ideal of unwavering devotion amidst worldly challenges and the permanent presence of an opportunity to turn around one's life. His narrative, woven into Sekkizhar's Periya Puranam, resonates with universal themes of compassion, resilience, and the transformative power of faith.

## Relevance in Contemporary Times

Thiruneelakanda Nayanar's life offers timeless lessons. In a world often driven by self-interest, his unwavering commitment to the word of his spouse and faith underscores the importance of enduring relationships and higher ideals. His story encourages modern readers to view life's challenges as opportunities for spiritual growth and to uphold love and compassion as guiding principles in times that seem impossible.

Ultimately, as we delve into the lives of the 63 Nayanars, Thiruneelakanda's story stands out as a beacon of hope and inspiration. His journey from a humble potter to a revered saint reminds us that true devotion is not measured by wealth or status but by the purity of one's heart. Through his life, and the enduring lessons they impart, Thiruneelakanda Nayanar continues to mould the lives of devotees, much like the clay he once shaped with devotion and love.

# Celebrating 50 Years of The University of Jaffna






Siva P.Ketharan
English Editor – Thennadu

The University of Jaffna, established on the 6th of October, 1974, is now celebrating its remarkable 50th anniversary. 50 years of providing valuable quality education to the community whilst also playing an important role in nurturing Tamil pride. Not only is it an institution for higher learning but also a testament to the vibrant spirit of the Tamil people. Initially, Sir Pon Ramanathan, a nationally acclaimed Statesman and Philanthropist, founded The Parameswara College, a premier Hindu educational institution in Jaffna. Then on October 6th 1974, Mrs. Srimavo Bandaranaike inaugurated the Jaffna Campus of the University of Sri Lanka on the premises of The Parameswara College. Following, the implementation of the Universities Act No.16 of 1978, the Jaffna campus became independent and autonomous and began to bear the name "The University of Jaffna".

At its inception, the University had 2 faculties namely, the Faculty of Science and the Faculty of Humanities. Over the many decades of teaching and development, it has grown to encompass 12 faculties; Faculty of Agriculture, Faculty of Allied Health Sciences, Faculty of Arts, Faculty of Engineering, Faculty of Graduate Studies, Faculty of Hindu Studies, Faculty of Management Studies and Commerce, Faculty of Medicine,

Faculty of Science, Faculty of Technology alongside the Sri Pon Ramanathan Faculty of Performing and Visual Arts and Faculty of Sidda Medicine. The University hence beautifully blends culture and education to not only preserve and promote traditional Tamil arts and medicinal practices but also seamlessly integrate them well into modern academic frameworks. In addition, the University also had a Faculty of Business Studies, Faculty of Applied Science and Faculty of Technological Studies at the Vavuniya campus, however, this campus is now independent forming the University of Vavuniya.

Jaffna University has a vision "To be a leading centre of excellence in teaching, learning, research and innovation, scholarship and community engagement". This reflects the university's 50-year commitment to developing the students who attend it. This vision underscores the university's dedication to producing graduates who not only excel academically but also contribute meaningfully to their communities and the world at large, embodying the spirit of progress rooted in cultural pride and social responsibility. Finally, the University of Jaffna has had an immense impact on the educational well-being of the region in its 50-year history whilst also preserving and promoting the rich Tamil culture. No doubt, it will continue to excel and help its students accel, whilst shaping a brighter Jaffna in the many years to come.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal





Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar once travelled to Patteeswaram in Summer, to visit the Thenupuriswarar temple which was believed to be built by the Cholas, while the present structure of the temple was built in the Nayak Dynasty in the 16th Century, with the temple complex covering around 4 acres. Unlike other temples the Nandi Statue is not directly in front of the Sivalingam allowing for a direct view. It was at this temple where some of Sivan's messengers came and held a pearl canopy above Sampanthar's head. They said that Sivan had told them to grant Sampanthar the pearl sunshade to save him from the heat. Sampanthar then said since it is Sivan's desire, I shall accept this. Sivan's messengers handed over the sun shade to Sampanthar's disciples and Sampanthar prayed to Sivan in gratitude.

Sampanthar sang a hymn that goes as follows:

**தொண்டர் குழாம் ஆர்ப்பெடுப்பச் சுருதிகளின் பெருந்துழனி**
**எண்திசையும் நிறைந்தோங்க எழுந்தருளும் பிள்ளையார்**
**வெண்தரளப் பந்தர் நிழல் மீதணையத் திருமன்றில்**
**அண்டர் பிரான் எடுத்ததிரு வடிநீழல் என அமர்ந்தார்.**

**Thonndar kulaam aarppeduppach churuthikalin perunthulani**
**Ennthisaiyum nirainthonka eluntharulum pillaiyaar**
**Venntharalap panthar nilal meethanaiyath thirumandril**
**Anndar piraan eduththa thiruvadi neelal ena amarnthaar.**

In English this translates to: The crowd of volunteers was cheering, and the sound of their chants echoed in all directions. The child (Sampanthar), rising, sat like a figure atop a golden lotus, with the shadow of a white pearl necklace falling across his hair.

**To be continued...**



# Why Do We Fast in Saiva Tamil Culture?

A vital part of the Saiva religion is fasting. Fasting in Saivam indicates the denial of the physical needs of the body for the sake of spiritual gains. It is aimed to be imperative for the well-being of a devotee, as it nourishes their physical and spiritual demands. Fasting is an optional part of Saivam. Individuals observe different kinds of fasts based on personal beliefs and local customs. For instance, devotees of Siva tend to fast on Mondays, whilst devotees of Ayyapa tend to fast on Saturdays. Devotees generally eat after sunset and drink liquid between sunrise and sunset.

Fasting is an integral part of Saivam and is seen as a means of purifying the body and the soul, encouraging self-discipline and gaining emotional balance. It may be practised on specific days of the week or during festivals, and holy days. There is no specific way to fast, but individuals may choose to abstain completely from all food and drink or from certain foods. For example, those who eat meat may choose to be vegetarian for a few days. For example, Kanthan Kavin Arumai (Kantha Sasti , 6th Stage of the Moon) which is a significant Saiva festival, is celebrated in October. During this time some Hindus fast for one meal, others stay vegetarian and some drink just water and eat fruit.



Nianthri Vijekumaran
Grade 9,
St Margaret's Grammar
Burwick

According to scriptures, fasting often helps create a bond between "individual souls" and God. Fasting aims to purify the mind and body to acquire grace. For the last thousands of years, most Saiva people have celebrated fasting, to purify the mind and body, celebrate rituals or religious festivals, boost stamina and nourish physical health, and train the mind and strengthen the body to endure and to face difficulties. Fasting has a deep spiritual and religious significance for Saiva people. It is a spiritual act with the aim of self-betterment. Fasting is an act of sacrificing food and hunger to God as a mark of faith and devotion. It is a commitment to escape sins. There are several more reasons as to why Saiva people fast.

In essence, fasting is a vital Saiva ritual and is used for many gains and benefits. Different parts of the world celebrate and fast during different times.

# Existence of Bondage (Paasam)

**Last month Summary :**

Sivakan, an 8 year old boy, discussed with his friends how the world was created and why. To explain, he compared it to a potter creating pots. He explained that just as a potter requires clay (material cause), tools like a wheel and pole (instrumental causes), and his own effort (efficient cause) to make a pot, the creation of the world involves three causes. Maayai is the material cause, Vinai (karma) is the instrumental cause, and Sivan is the efficient cause. The world, created out of Sivan's compassion, provides souls the opportunity to overcome ignorance (Aanavam) and progress towards bliss.



First, the existence of the Lord Almighty was confirmed after careful consideration. We then posed the question: "Is there a barrier (paasam or bondage) that prevents us from knowing the Lord Almighty? If so, what is it, and what is its nature?" This led us to the following conclusions.The Lord Almighty is all-knowing, possessing infinite intelligence and unlimited knowledge. However, uyirkal (Souls/jivas), have only limited understanding. With our finite knowledge and constrained tools of perception (such as our senses, mind, and intellect), we are unable to comprehend the infinite nature of the Lord Almighty. Out of immense compassion, the Lord provides the uyir(soul) with the necessary body, environment, and circumstances to gain wisdom. Through this process, we undergo countless cycles of birth and death. Our spiritual progress depends on the maturity of our knowledge. Through the actions performed in each life, we create the conditions to experience the consequences of those actions (vinai). While enjoying the results of these deeds, we also prepare for future lives through new actions. Furthermore, the body we receive aligns with our vinai and is granted by the will (aanai) of the Lord Almighty, coming from His infinite grace and compassion. It is created out of maayai, the causal matter. Additionally, there exists a fundamental spiritual impurity known as aanavam, which limits the soul's awareness of its Creator. Thus we learnt that the three spiritual impurities - aanavam, vinai and maayai together constitute bondage (paasam/thalai) for the soul.

Saiva Philosophy Reference: The takeaway of this story is that the soul's inability to realise Sivan is due to the threefold bondage (paasam) of aanavam (spiritual ignorance), vinai (karma), and maayai (illusion). Sivan, in infinite compassion, provides bodies and experiences shaped by vinai to aid the soul's spiritual progress. Through this process, the soul gradually overcomes these impurities and moves closer to realising the infinite knowledge and the grace of Sivan.

# தென்னாட்டு நிகழ்வுகள்





தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த அடியார்கள் தென்னாட்டில் வழிபாடு (05-12-2024)









கார்த்திகைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (28-11-2024)



# தென்னாட்டு நிகழ்வுகள்



கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையார் திருக்கோயில் சங்குநீராட்டு (09-12-2024)



ஐப்பசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (15-11-2024)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து இரண்டாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 30ம் நாள் நிறைமதி அன்று (15-12-2024 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிற மொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org